பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

ஜவுளி வியாபாரிகளுக்கு
ஓர் நற்செய்தி!
"பூகோட"
தயாரிப்புக்களின்
பிடவைத்தினுசுகளுக்கு
வடமாகாண ஏக
விநியோகஸ்தர்கள்
"ராஜ்கோபால்ஸ்"
பூகோட மொத்த,
சில்லறைவிற்பனையாளர்கள்
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை
ரூ 2. 50

மங்கள வைபவமா?
நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
"ராஜ்கோபால்ஸ்"
(பட்டுச் சேலைகளின்
காட்சியகம்)
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

கூர்: 4 சிபவ ஞூ தை மீ 12 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 16 (25-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 53

# வவுனியா, திருமலையில்

# தொழில்நுட்ப கல்லூரிகள்

## சிபார்சை செயற்படுத்த முடிவு

கொழும்பு, ஜனவரி 25

வவுனியாவிலும், திருகோணமலையிலும் புதிதாக இரண்டு தொழில்நுட்பக் கல்லூரிகள் நிறுவப்படும். இது தொடர்பாகச் செய்யப்பட்ட சிபார்சை செயற்படுத்துவது என அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக அடுத்த சில தினங்களில் கொழும்பில் விசேட மாநாடு ஒன்று நடக்கவிருப்பதாகவும் தெரிகிறது.

தொழில்நுட்பக் கல்வி சம்பந்தமாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஞானலிங்கம் கமிட்டியின் சிபாரிசையே செயற்படுத்துவது என அரசாங்கம் திர்மானித்திருக்கிறது.

வடமாகாணத்தில் தற்போது யாழ்ப்பாணம் கொக்குவிலில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி இயங்கிவருகிறது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களின் தொழில் நுட்பக் கல்வியையும், யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாத்திரமே தனித்து நின்று கவனிக்கிறது.

இதேவேளையில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையிலிருந்து கூட தொழில் நுட்பக் கல்விக்காக மாணவர்கள் யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கு வரவேண்டியிருக்கிறது.

இதனால் யாழ் தொழில் நுட்பக் கல்லூரி இன்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கலைஞரின் அமைச்சரவை வெள்ளியன்று பதவியேற்பு

சென்னை ஜன 25

கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க அமைச்சரவை நாளை மறுநாள் வெள்ளி காலை 9மணியளவில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் வைபவம் ஒன்றில் பதவி ஏற்கும்.

மாநில ஆளுநர் பி. ஸி. அலெக்ஸாண்டர் முதலமைச்சர்களுக்கும் மற்றும் அமைச்சர்களுக்கும் பதவிப் பிரமாணமும் இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைப்பார்.

நாளை மாலை சென்னை மரீனா கடற்கரையில் தி. மு. க, வெற்றிவிழாக் கூட்டம் நடைபெறும்.

எதிர்க்கட்சித் தலைவர்களான திரு. வி. பி. சிங், திரு. மதுதண்டவதே மேற்குவங்காள முதலமைச்சர் ஜோதிபசு, ஆந்திர முதலமைச்சர் என். ரி. ராமராவ், கர்நாடக முதலமைச்சர் ஆர். பொம்மை, கேரள முதலமைச்சர் இ. கே. நாயனார் ஆகியோர் விழாவில் கலந்து கொள்வார் என்று தி. மு. க. தலைமை நிலையம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)

## ஜெயலலிதா எம்.பி.பதவியை துறந்தார்

சென்னை, ஜன 25

ராஜ்யசபை எம் பி. பதவியை செல்வி ஜெயலலிதா ராஜிநாமாச் செய்துவிட்டார்.

தமிழ்நாடு சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து செல்வி ஜெயலலிதா, மாநில அரசியலில் தீவிரமாக ஈடுபட முடிவு செய்திருக்கிறார்.

சட்டசபைக்குத் தெரிவான ஜெயலலிதா அணியின் 32 எம் எல் ஏக்களும் இன்று கூடி சட்டசபைக் குழுவின் தலைவரைத் தெரிவு செய்ய இருக்கின்றனர்.

## ஒவ்வொரு வங்கிக்கும் 30 கடன் வழங்கும் பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஜன. 25

வடமாகாணத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளை ஒவ்வொன்றின் ஊடாகவும் 30 கடன் வழங்கும் பிரதிநிதிகள் (Credit Facilitators) நியமிக்கப்படுவார்கள்.

இலகு முறையில் கடன் வழங்கும் நோக்கத்துடனேயே இவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் இலங்கை வங்கி முதலில் தலா இரண்டு லட்சம் ரூபா வழங்கும்.

சம்பந்தப்பட்ட பிரதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவும் வாழ்த்து

மணிலா, ஜன 24

அமோக வெற்றியீட்டிய தி மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பிவைத்திருக்கிறார்.

இத்தகவலை பிபா வானொலி அறிவித்தது.

## தங்கள் வெற்றி எமக்குத் தெம்பு தருகிறது — பாலகுமார்

யாழ்ப்பாணம், ஜன 25

"மக்கள் தீர்ப்பின் மூலம் அறுதிப் பெரும்பான்மை பெற்றுத் தாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்பது எம்மவருக்குத் தெம்பைத் தருவதாகும்" என்று ஈரோஸ் அமைப்பின் சார்பில் திரு. வே. பாலகுமார் கலைஞர் கருணாநிதிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவருக்கு அனுப்பிய செய்தியில் கூறப்பட்டிருப்பதாவது:-

ஆட்சிப் பொறுப்பில் தாங்களும், கழகத்தினரும் மீண்டும் அமர இருக்கும் செய்தியறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறோம்

ஈழம் வாழ் மக்களின் நலன்கள்குறித்து தாங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழ் மக்களுக்காக தொடர்ந்து குரல் கொடுங்கள் — குமார்

யாழ்ப்பாணம், ஜன 25

ஈழத் தமிழ் மக்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சராகப் பதவி ஏற்க இருக்கும் தி மு. க, தலைவர் கலைஞர் கருணாநிதியை, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் கேட்டுள்ளார்.

திரு. கருணாநிதிக்கு அவர் அனுப்பி வைத்துள்ள செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது.-

தமிழன் எங்கு வாழ்ந்தாலும், அவனுக்கு இன்னல் ஏற்பட்ட வேளையில் நீங்களும் உங்களைத் தலைவராகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகமும் குரல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கடவுளின் தீர்ப்பாம்

சென்னை, ஜன 25

தேர்தல் தீர்ப்பை கடவுளின் தீர்ப்பு என்று எடுத்துக்கொள்வோம்

அ தி மு. க,வில் இரண்டு அணிகளின் தலைவிகளாகிய திருமதி ஜானகி அம்மாளும் செல்வி ஜெயலலிதாவும் தனித்தனியே கருத்துத் தெரிவிக்கையில் முன்கண்டவாறு கூறினர் (உ-எ)

## 42 பேயர்கள் வெளியாகின

யாழ்ப்பாணம், ஜன 25

ஆசிரிய முன்சேவைப் பயிற்சி பெறவுள்ள 42 பேர்களது பெயர்ப்பட்டியல் நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது.

இவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை யாழ்ப்பாண ரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடாத்த உத்தேசிக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

25-01 1989
தை 12
புதன்கிழமை
சுபநேரம்:
5 06 முதல் 6 36 வரை
ராகுகாலம்:
12 35 முதல் 2 06 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்



## வடக்கில் வீதி அமைக்க 43 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் ஜன 25

வடமாகாணத்தில் வீதிஅமைப்பு வேலைகளை மேற்கொள்ளுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் 28 கோடி ரூபாவையும் உலக வங்கி சுமார் 15 கோடி ரூபாவையும் ஒதுக்கியுள்ளது.

பெரும் தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபையின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்த வேலைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது

இந்த வேலைகளை ஆரம்பிப்பது பற்றி ஆராய்வதற்கான உயர் மட்ட மாநாடு ஒன்று அடுத்தவாரத்தில் கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

இந்த மகாநாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரமுகர்களும் உலக வங்கிப் பிரமுகர்களும் கலந்து கொள்வர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

இந்த வேலைகளுக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி யாழ் மாவட்டத்திற்கு 6 கோடி ரூபாவையும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 3 கோடி ரூபாவையும், வவுனியா மாவட்டத்திற்கு 6 கோடியே 60 லட்சம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உண்மையான அமைதியை கொண்டுவர முயற்சிப்பேன்

### ஈழ விவகாரம் குறித்து கருணாநிதி

சென்னை, ஜன. 25

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நாம் இதுவரை கடைப்பிடித்து வந்தகொள்கையில் மாற்றம் இராது.

தி மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி செய்தியாளர் மத்தியில் பேசுகையில் முன்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;—

எதிர்க்கட்சியாக இருந்த சமயம் நாம் இலங்கைத் தமிழரின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தோம். அவர்களின் அமைதி வாழ்வுக்கும் உத்தரவாதம் கோரினோம்.

இப்போது நாம் ஆளுங் கட்சியாகி விட்டோம். இதனைப் பயன்படுத்தி தமிழ் ஈழத்தில் உண்மையான அமைதியைக் கொண்டுவர எம்மாலான முயற்சிகளை எடுப்போம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை பொறுத்தமட்டில் கட்சிக் கொள்கை நீடிக்கும்.

—இப்படி திரு. கருணாநிதி தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனிடம் இருந்து செய்திகள் ஏதும் வந்ததா? என்று கேட்டதற்கு, தி.மு க. ஆட்சிக்கு வரவேண்டும் என்பதே அவரின் விருப்பம்.

அதைவிட இணக்கமான தீர்வு காணப்படவேண்டும் என்பதே திரு. பிரபாகரனின் விருப்பம். அதற்கு தி மு க. வின் வலுவான ஆதரவு இருக்கும். அவரையும் 'தமிழ் ஈழம்' மக்களையும் தி. மு. க. அரசு ஏமாற்றத்துக்குள்ளாக்காது.

—இப்படி திரு. கருணாநிதி சொன்னார்.

இதேவேளை ராய்டர் செய்திச் சேவைக்கு திங்கட்கிழமை அளித்த பேட்டி ஒன்றில் திரு. கருணாநிதி பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்;

ஈழத் தமிழர் விவகாரத்துக்கு முன்னுரிமை கொடுப்பேன் எங்கள் கட்சிக்குக் கிடைத்த வெற்றி ஈழத் தமிழர்களுக்கு உதவுவதற்கு நல்ல சந்தர்ப்பத்தைத் தந்துள்ளது என்றார்.

(அ-எ)

## வற்றாப்பளையில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 25

சரித்திரப் பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை சிறப்பாக நடைபெறுகிறது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் பிரதிஷ்டா கருமக் கிரியைகள் ஆரம்பமாகி நடந்து வருகின்றன.

கும்பாபிஷேக விழாவை ஒட்டி விசேட போக்குவரத்து வசதிகளும், சுகாதார வசதிகளும். முல்லைத்தீவு அரசாங்க அதிபரினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன

(சிறப்பு மலர் உள்ளே)

## இ. காங்கிரஸ் வெற்றி

மிஸோரம், நாகலாந்து சட்டசபைத் தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் கட்சி அறுதிப் பெரும்பான்மை இடங்களைப் பெற்றது (உ)

## ஜப்பான் மன்னரின் இறுதிச் சடங்கில் ஜே.ஆர்

87 வயதில் காலமான ஜப்பான் சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ள, 83வயதான முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா செல்வார் என்று கொழும்பில் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை அரசின் பிரதிநிதியாக திரு ஜெயவர்த்தனா கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது

அடுத்த மாதம் 24 ஆம் திகதி ஹிரோஹிட்டோவின் இறுதிச் சடங்குகள் நடைபெற உள்ளன. (உ-எ)

## முச்சந்தி முரளி



மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்டதை இரண்டு பொம்பிளையளும் உணர்ந்திட்டினம் போலை...!

## வெற்றியை வரவேற்கிறார் வரதராஜப்பெருமாள்

கொழும்பு. ஜன 25

திரு கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு எமக்கு வேண்டிய முழு ஒத்துழைப்பையும் நல்கும் என்று எதிர் பார்க்கிறேன்.

வட கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு அ வரதராஜப்பெருமாள் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

தி மு க வின் வெற்றியை நாம் வரவேற்கிறோம். திரு கருணாநிதி எங்கள் கட்சிக்கு நண்பன்.

ஈழத் தமிழ் மக்கள் எல்லோருக்கும் அனு

(6 ஆம் பக்கம் பார்க்க

## சமாதானத்திற்கு வழி — அமிர்

கொழும்பு, ஜன 25

தி. மு க தலைவர் கருணாநிதியின் வெற்றி வடக்கு, கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த உதவும் என்று கூட்டணித் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம்தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது—

தலைவர் கருணாநிதி இலங்கைத் தமிழர் விடயத்தில் நிதானப் போக்கும் அனுதாபமும் கொண்டவர்.

அவரின் வெற்றி எமது தாயகத்தின் சமாதானத்தை ஏற்படுத்த உதவும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## தமிழக மக்களுக்கு பலமான தலைமை - ரெலோ பிரமுகர்

யாழ்ப்பாணம், ஜன 25

தமிழ்நாட்டு மக்கள் தி.மு. கவைப் பதவியில் அமர்த்தியதன் மூலம் பலமான தலைமையைப் பெற்றுள்ளார்கள் என்று தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) பிரமுகர் திரு. ந ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

விலைமதிப்பற்ற தமது வாக்குரிமையைப் பிரயோகித்து அரசியல் முதிர்ச்சியும் உறுதியும் கொண்ட பலமான தலைமையைத் தமிழ் நாட்டு மக்கள் பெற்றுள்ளார்கள்.

மீண்டும் உதயசூரியன்

[6 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனை**
தமிழ் Standard தட்டச்சு இயந்திரங்கள் பழைய- புதிய Key Board, ஆங்கில Potable Typewriters, விற்பனைக்கு உண்டு. Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.(Samy&Co Shabra அருகாமையில்). (9230)

புதிய டீ பிறீசரும் இறைச்சி பிறிச்சும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: நோர்த் அயன் என்ஜினியர்ஸ் 95, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். [கன்னாதிட்டி காளி கோவிலுக்கு முன்பாக] (9054)

**வலம்புரிச்சங்கு**
இல்லங்களில் இலட்சுமி கரம் நிலவுவதற்கும் ஆலயங்களில் ஆராதனைகளுக்கும் உகந்த சிறந்த வலம்புரிச் சங்குகள் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க: தாஸ், 188, புதுச் செட்டித்தெரு கொழும்பு -13 (9221)

**காணி விற்பனை**
ஒட்டுமடத்தில் மானிப்பாய் பிரதான வீதியருகிலிருக்கும்இருதுண்டு இருபத்திநாலு பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு. 7,ஐயனார்வீதி, வண்ணார் பண்ணையில் தொடர்பு கொள்ளவும். (9226)

**சமூகக்கல்வி நூல்கள்/ பயிற்சிகள்**
சமூகக்கல்வி ஆண்டு 6, 7, 8, 9, 10, 11ஆம் வகுப்புகளுக்குரிய நூல்களும், பயிற்சிகளும் தனித்தனியே வெளிவந்துவிட்டன. ஆக்கியோன்; க. குணராசா, ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (8960)

**கோழிக்குஞ்சு விநியோகம்**
புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க. சற்குணராஜா அன், பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (8755)

**கோழிக்குஞ்சு விநியோகம்**
**Uplands Farm**
இரண்டு மாதத்தில் அதிக நிறையுள்ள வளர்ச்சியடையக் கூடிய (DEKALB) இன பிறவுண் சேவல் குஞ்சு (1- 2- 89) புதன் கிழமை விநியோகிக்கப்படும். விலை ரூபா. 4. 50 முன்கூட்டியே பதிவுசெய்க இல. 9 சந்தையாலேன் சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (9222)

Nallur Farm Centre- Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற்குஞ்சுகள், Golden Comet, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள், ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர்; 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/1340)

பிறிமா லோமன் வெள்ளை, சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் "Golden Commet" சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்புச் சேவல் குஞ்சுகள் வளர்த்திகுஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள், கோழிகள், கோழித்தீன் கோழிகளுக்கான மருந்து வகைகள் ஆலோசனைகள் ஆகியன வற்றிற்கு தொடர்பு: கொள்ளுங்கள்: பரம் ஏஜன்சி கிளிநொச்சி (8890)

**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**
பிறிமாயின ஒரு நாள் புறொயிலர்க் குஞ்சுகள் சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு சனிக்கிழமையும் வழங்கப்படும் குஞ்சுகளுக்கு 7 நாட்கள் உத்தரவாதம். பதிவு; 11/6, ஸ்ரான்லி வீதி, திருமகள் ஸ்ரோர்ஸ், சிவலிங்கப்புளியடி சாயி மெடிக்கல்திருநெல்வேலி சந்தி, (7916)

**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**
Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், குப்குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை,நல்லூர். [C/1341)

**தேவை**

**தேவை**
நல்ல அனுபவம் நிறைந்த மெஷின் மைன்டர், பைன்டர் தேவை. உடன் தொடர்புகொள்ளவும்: மேக்குறி அச்சகம், 40/1, நாவலர் வீதி, (ஐந்து சந்திக்கு அண்மையில்) யாழ்ப்பாணம். (9072)

மருந்துக்கடையில் வேலை செய்வதற்கு 15-18 வயதுக்கு உட்பட்ட பையன்கள் தேவை. நேரில் வரவும் விலாசம் க செகைனா சம்பின்னை &சன்ஸ் யாழ்ப்பாணம். (C/1548)

Photo State மெஷின் ஒப்பரேட்டர் Sales girl Aecounts Clerk வேலைக்கு ஆள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும், 438, C/o உதயன். (9228)

**சேவை**

Type Writers- தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சாரநிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [Samy & Co - Shabra அருகாமையில்] [C/1362]

யாழ். சைனீஸ் முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் தினசரி இரவு7. 30 வரை திறந்திருக்கும். அறைகள் வாடகைக்கும் உண்டு. (9207)

**காணவில்லை**
அன்ரனி வோல்ரற் நிக்கிளஸ் (நெல்சன்) 13, பூங்கா வீதி, றெக்கிளமேசன் குருநகர் யாழ்ப்பாணம் இந்த விலாசத்திலுள்ள அடையாள அட்டை காணமற் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (9229)

**காணவில்லை**
கடந்தமாதம் 26 ஆம் திகதி எனது அடையாள அட்டை இலக்கம் 582773203V பெயர் மைக்கேல் லெனி பெலிசியன் காணமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள விலசத்திற்கு ஒப்படைத்தோ அனுப்பியோ விடவும். சன்மானம் வழங்கப்படும். 17/1 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (9227)

**NEW CITY TRADERS**
சகல விதமான சுவர் மணிக்கூடுகள் கைக்கடிகாரங்கள் மேசை மணிக்கூடுகள், film roll வகைகள், சூட்கேஸ், Travelling bags, School bags, Wheel bags, எவர்சில்வர் பொருள்கள், glass, மற்றும் அன்பளிப்புப் பொருள்களை பெற்றுக் கொள்ள New City Traders, 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் [C/1536

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் 1989 ஆம் ஆண்டு தைத்திங்கள் 14 ஆம் நாள் (27-1-89) வெள்ளிக்கிழமை காலை 9 - 00 மணியளவில், உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் புனித பற்றிமா மாதா ஆலயத்தில்,

| | |
|---|---|
| எமது மகன் திருநிறை செல்வன் | எமது மகள் திருநிறை செல்வி |
| அருளானந்தம் (சீனித்தம்பி தில்லையம்பலம்) | ப, சூ. தம்பிநாயகம் |
| **அன்ரன் ஜெயசேகரம்** அவர்களுக்கும் | **லில்லிதேரேசா** அவர்களுக்கும் |

திருமணம் இனிது நிறைவேற இறையருள் பாலித்துள்ளது. அத்தருணம் தயைகூர்ந்து தாங்கள் அனைவரும் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து வைபவத்தை சிறப்பிக்கும் வண்ணம் சிரம்தாழ்த்தி கரம்கூப்பி வேண்டுகின்றோம்.

உங்கள் நல்வரவையும் ஆசியையும் நாடும்,

| | |
|---|---|
| சீ. பெனடிற் அருளானந்தமும் | ம சூ. தம்பிநாயகமும் |
| பாரியாரும், பிள்ளைகளும் | பாரியாரும், பிள்ளைகளும் |
| இல. 112. மேற்கு,உருத்திரபுரம் | இல. 140, மேற்கு, உருத்திரபுரம். |

(9275)

# புலோலி பசுபதீஸ்வரர் ஆலய
# இராஜ கோபுர நிதி

| | | |
|---|---|---|
| | 16-09-88 வரை முற்தொகை | 1,47,866 75 |
| 1 | எம். கந்தசாமி, தும்பளை | 5000.00 |
| 2. | செ. யோகராஜ், நாகலிங்கம் முதலியார் ஒழுங்கை | 5000.00 |
| 3. | திருமதி த. இராசேஸ்வரி, செட்டித்தெரு, பரு. துறை | 5600.00 |
| 4. | ஆ தெய்வேந்திரம், சார்ஜா | 4950.00 |
| 5 | அம்பாள் 8 ஆம் திருவிழா உபயகாரர் | 1500.00 |
| 6 | திருமதி எ. சின்னையா, தம்பசிட்டி | 1001.00 |
| 7. | என் சிவலிங்கம், அல்வாய் தெற்கு | 1000.00 |
| 8. | சம்பந்தர் இராசரத்தினம், பெரிய அத்தாய் புலோலி | 1000.00 |
| 9. | ஆர். நடேசன், செட்டித்தெரு, பருத்தித்துறை | 1000.00 |
| 10 | சி குருநாதன், தும்பளை ரோட், பருத்தித்துறை | 1000.00 |
| 11. | திருமதி. விஜிதாதேவி, இராதாகிருஷ்ணன் 1ஆம் குறுக்குத்தெரு பருத்தித்துறை | 1000.00 |
| 12. | எஸ். ரி. றவீந்திரன், ஓமான் | 1000.00 |
| 13. | ச. அம்பிகாபதி 4 ஆம் குறுக்குத்தெரு பருத்தித்துறை | 1000.00 |
| 14. | திருமதி பா. தங்கராசா, மந்திகை, புலோலி | 1000.00 |
| 15. | செல்வி பாமினி சந்திரமோகன், லண்டன் C/o பி. கே. முத்துக்குமாரசாமி | 500.00 |
| 16. | தா. கணபதிப்பிள்ளை, புலோலி மேற்கு | 500.00 |
| 17 | வை குலசேகரம், இளைப்பாறியபொறியியலாளர் பரு துறை | 500.00 |
| 18. | எ சிவானந்தம், தும்பளை | 500 00 |
| 19. | அம்பாள் 3 ஆம் திருவிழா உபயகாரர், தும்பளை | 500 00 |
| 20. | வேலுப்பிள்ளை இராசசேகரம், முருகையன் கோவிலடி தும்பளை | 500 00 |
| 21. | திருமதி இ. கமலாம்பிகை, செட்டித்தெரு, பரு துறை | 500.00 |
| 22. | வைத்திய கலாநிதி ந. பத்மநாதன், செட்டித்தெரு, பரு: | 500.00 |
| 23. | கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை, பண்டாரவத்தை, புலோலி கிழக்கு | 500.00 |
| 24. | இராமஜயம் சிவசங்கர், மணியகாரன் சந்தி, தும்பளை | 500.00 |
| 25. | எஸ். சிறிகந்தராசா செட்டித்தெரு, பருத்தித்துறை | 500-00 |
| 26. | அழகையா குகானந்தன், தும்பளை ரோட், | 500.00 |
| 27. | ந. சிறிறங்கநாதன், கொழும்பு | 250.00 |
| 28. | இராசரத்தினம் ஜெயந்தி, சிவன் கோவில் கிழக்கு, பரு | 150 00 |
| 29. | கி. பூபாலசிங்கம், சந்தை மேற்கு ஒழுங்கை, பருத்தித்துறை | 150 00 |
| 30. | கு. நவரத்தினசோதி, பத்திரகாளி ஒழுங்கை பரு.துறை | 108 00 |
| 31. | தி. சிவகடாச்சம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை | 105.00 |
| 32. | என் சிவஞானசுந்தரம், இளைப்பாறிய கிராம சேவையாளர் பருத்தித்துறை | 100.00 |
| 33. | க சபாபதிப்பிள்ளை, தும்பளை | 100.00 |
| 34. | கோ. இராசகோபால் சிவன் கோவிலடி தும்பளை | 100 00 |
| 35. | என் நாவலழகன், அல்வாய் தெற்கு அல்வாய் | 100.00 |
| 36. | க. சிவசுப்பிரமணியம், மயிலிட்டி | 100.00 |
| 37. | மாணிக்கம் செந்தில்வேல், மருதடி, பருத்தித்துறை | 100.00 |
| 38. | ம, கோபாலகிருஷ்ணன், மாவடி, மாதனை | 100.00 |
| 39. | மு. விநாயகமூர்த்தி, மாவடி, மாதனை | 100.00 |
| 40 | ஆ. சிவராசா, கமலா புத்தகசாலை பருத்தித்துறை | 100.00 |
| 41, | ஆ திரு புலோலி மேற்கு, பருத்தித்துறை | 50.00 |
| 42. | வி. தங்கராசா பிரதான வீதி, பருத்தித்துறை | 50.00 |
| 43. | செல்வி பாமதி சிவராசா, நாகலிங்க முதலியார் ஒழுங்கை, பருத்தித்துறை | 50.00 |
| 44. | பா. கனகசுந்தரம், அல்வாய் வடக்கு, | 50.00 |
| 45. | பசுபதி கந்தசாமி, காந்தியூர், புலோலி தெற்கு | 50.00 |
| 46. | வசந்த புஸ்பநாதன், கரம்பம குறிச்சி வறணி | 25.00 |
| 47. | செல்வி க. செல்வநாயகி வேதவனம் ஒழுங்கை புலோலி கிழக்கு | 25.00 |
| 48. | ச. உதயகுமார், கோவில் கடவை, துன்னாலை தெற்கு, கரவெட்டி | 20.00 |
| 49. | செ. வேலும் மயிலும், அல்வாய் தெற்கு | 10.00 |
| 50 | குட்டித்தம்பி, இமையாணன் உடுப்பிட்டி | 10.00 |
| | | 1,86,320.75 |
| 51. | நா. குகதாசன் அவர்களால் லண்டனில் சேர்க்கப்பட்டு பருத்தித்துறை வங்கிக்கு அனுப்பியது: $ 500 | 29,373.00 |
| | | 2,15,693 75 |

(C/1350)

# சுவாமிவிவேகானந்தரின் 127ஆவது ஜயந்திவிழா

## பருத்தித்துறையில் ஞாயிறன்று

பருத்தித்துறை, ஜன.25 சுவாமி விவேகானந்தரின் 127-ஆவது ஜயந்தி விழா எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஜயந்தி விழாவையொட்டி சேவாச்சிரமம் தமிழ்நாடு கோவை பெரியநாயக்கன் பாளையத்தில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயத்தில் பயிற்சிபெறநான்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்து அனுப்பவும் யாழ் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான இரண்டு மாணவர்களுக்கு அவர்களின் கல்வியாண்டு முடியும் வரை புலமைப் பரிசில் வழங்கவும் முடிவு செய்துள்ளது.

சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா இதனைத் தெரிவித்தார். (க-118)

உ
சிறுப்பிட்டிவடக்கு, நீர்வேலி

# அருள்மிகு ஸ்ரீ விஷ்ணு துர்க்கா ஆலய அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

நிகழும் விபவ வருஷம் தைமாதம் 12 ஆம் திகதி (25-01-1989) புதன்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி 11 தினங்கள் வரை நடைபெறும்.
11 ஆம் நாள் சனிக்கிழமை பகல் சங்காபிஷேகமும் அன்னதான வைபவமும் நடைபெறும்.
அடியார்கள் விழாக்காலங்களில் பால், பழம், இளநீர் - தானியவகை, பட்டு- மாலை, வாசனைத்திரவியம் போன்றவற்றைக் கொடுத்து உதவும் வண்ணம் வேண்டுகின்றோம்.
விழாநேரம்: பகல் 1-00 தொடக்கம் 4-00 வரை
மஹோற்சவ குரு: த. கெங்காதரக்குருக்கள் புன்னாலைக்கட்டுவன்.

இங்ஙனம்!
கா. நடராசா
தர்மகர்த்தா

(9276)

# A/L விஞ்ஞான மாணவர்களுக்கு

## 90 அசேதன இரசாயனம்

Sat & Sun — 5.00 p.m — 6.00 p.m
ஆரம்பம்- 28-01-1989
ஆசிரியர்: Mr. நாகரட்னம் B.sc
மணல்தரை லேன், கந்தர்மடம். [C/1353]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





திரு.க.சி. பொன்னுத்துரை

திருமதி பொ. பவளரத்தினம்

நீர்வேலி தெற்கு, திரு.க. சி. பொன்னுத்துரை அவர்கள் (கூட்டுறவு இலாகா சிரேஷ்ட உதவி ஆணையாளர்)

| | |
|---|---|
| தோற்றம்:- 14- 02- 1914 | தோற்றம்:- 08- 03- 1919 |
| மறைவு :- 07- 02- 1986 | மறைவு :- 30- 10- 1987 |

பாச தீபம் அன்புச் சுடரே, உடன் பிறப்பிற்கு இலக்கணமாய் அன்பின் தெய்வமாய், பண்பின் சிகரமாய் எங்களை வளர்த்து வாழ் வாங்கு வழி காட்டிய அன்புத் தெய்வமே! ஓராண்டு ஆயினும் உங்கள் பிரிவை எம்மால் மறக்க முடியாது.

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக

அன்புச் சகோதரி,
திருமதி அன்னபூரணம் கனகரத்தினம்.
நீர்வேலி தெற்கு.
(9267)

உ
சிவமயம்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உயர்திரு
அப்பச்சிப்பிள்ளை தங்கராசா

| | |
|---|---|
| தோற்றம்: | மறைவு. |
| 21-05-1926 | 06-02-1988 |

திதி. அபரபக்க சதுர்த்தி 25.1.1989

"பண்புடைய மக்கள் பயிலும்
பண்ணாகத்தினில்
அப்பச்சிப் பிள்ளையின்
அருந்தவப் புதல்வனாய்
வந்து அவதரித்த மாசிலா மணியே!
தங்கராசா தரணியில்நீயே
பக்தியோடு பவோலை
நினைந்தே எத்தகையோரும்
எளிதின் உணர்ந்த
புராண படனம் புரிந்தவுன்
ஓராண்டு நிறைவு உன்னி
மனைவி மக்களும்
மற்றுளோர் யாவரும்
உன் ஆன்ம சாந்திஸ!!
உன்னி இறைவனை
நினைந்தே தவமியற்றுவரே"

-மனைவி, மக்கள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

புராணபடன நண்பர்,
ச. விசுவநாதர்,
பண்ணாகம்,
சுழிபுரம்.
(9270)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய கும்பாபிஷேக சிறப்பு மலர்

## வன்னித் தலத்தில் எழுந்தருளி வற்றாது வரமளிக்கும் அம்பாள்

**மு. குகதாசன்**

ஈழத் திருநாட்டின் வன்னிப் பிரதேசத்திலே முல்லை மாவட்டத்தில் உள்ளது வற்றாப்பளை எனும் கிராமம்.

இக் கிராமத்தில் ஸ்ரீ கண்ணகி அம்பாள் எழுந்தருளி, நாடி வரும் அடியார்களுக்கு அருள் பாலித்து வருகின்றாள்.

கண்ணகி எழுந்தருளிய இத்தலமானது இலங்கையிலுள்ள சைவ சமய வழிபாட்டுத் தலங்களில், புராதன சிறப்புடைய புண்ணிய தலங்களில் ஒன்றாக விளங்குகின்றது.

'பத்தினித் தெய்வம்' எனப் பிற மதத்தவர்களும் போற்றிவழிபடும், கண்ணகி அம்பாள் இத் தலத்தில் காட்சி கொடுத்த அற்புத வரலாறுகள் கர்ண பரம்பரைக் கதைகளாலும், காவியங்களாலும், பதிகங்கள் பாடல்களாலும், சில வரலாற்று நூல்களாலும் அறியக்கூடியதாக உள்ளது.

பத்தினித் தெய்வம் இத் தலத்தில் எழுந்தருளியமை பற்றிய விரித்த வரலாற்றின் சுருக்கமாவது:-

தற்போது ஆலயம் அமைந்துள்ள 'நந்திக்' கடற்கரைத் தரிசு நிலத்தில் பண்டையில் ஒரு நாள் பசுமாடுகளை மேய்த்துக்கொண்டு நின்ற சிறுவர்கள் பொழுது போக்காக மண்ணினால் சிறு கோவில் கட்டி விளையாடிக்கொண்டிருந்தனர். அங்கு ஒரு மூதாட்டி அவர்களிடம் வந்து, உரையாடினார்.

சிறுவர்கள் அம்மூதாட்டியை யாரென வினவினார்கள். அதற்கு மூதாட்டி '' உறைந்திடலாம் சோழநகர் உற்று வந்தேன் கதிர்காமம்'' என்றுரைத்தார்.

'நன்று! விளக்கேற்றிப் பூசை செய்யுங்கள்.' என்று மூதாட்டி உரைக்க, விளக்கேற்றுவதற்கு நெய் இல்லை என்று சிறுவர்கள் கூறினர். உடனே அருகே உள்ள நந்திக் கடலின் உவர் நீரை விளக்கில் இட்டு ஏற்றுங்கள் என மூதாட்டி கூறியதன்படி சிறுவர்களும் அங்ஙனம் நீர் அள்ளி விளக்கேற்றினர்.

விளக்குப் பிரகாசமாக எரிந்தது அச் சமயம் அங்கு இருந்த மூதாட்டி மறைந்தார். விளக்கின் சோதியில் கண்ணகி தோன்றித் தன்னை யார் என்று புலப்படுத்தினார்.

''நானே கண்ணகி. இன்று போல் ஒவ்வொரு ஆண்டிலும் இத் தினத்தில் என்னை இங்ஙனம் பூசித்து வழிபடுவீர்களானால் நான் வந்து உங்களுக்கு வேண்டிய வரங்களைத் தந்தருள்வேன்'' என்று திருவாய் மலர்ந்து காட்சி கொடுத்து மறைந்தருளினார்.

மலைப்புற்ற சிறுவர்கள் இங்கு நடந்த அதிசயங்களைப் பற்றி விரைந்து வீடு சென்று பெரியவர்களிடம் கூறினர்.

ஊர்ப் பெரியவர்கள் சிறுவர்களுடன் அவ்விடத்துக்குச் சென்று பார்த்த சமயம் உவர் நீர் விளக்கு ஜெகஜோதியாக எரிந்துகொண்டிருப்பதையும், மூதாட்டி இருந்து உரையாடிய பட்டுப்போன வேப்பம் படவாள் குற்றியானது கிளைவிட்டுத் தளிர்த்து வேப்பம் விருட்சமாய் நிற்பதையும் கண்ணுற்றுப் பேராச்சரியமுற்றனர். கண்ணகி அம்பாளின் அனுக்கிரகம் தமக்குக் கிடைத்துள்ளதாக புளகாங்கித பரவசமுற்று அச் சிறுவர்களது கோயிலை வலம் வந்து விழுந்து வணங்கிப் பலவாறு துதித்தனர்.

இத் தினத்தில் இங்கு கண்ணகித் தாயார் காட்சி கொடுத்தமையைத் தொடர்ந்து அதன் பின்னர் ஆண்டுதோறும், இத்தலத்திலே வைகாசித் திங்கள் விசாகம் சேர் பூரணைச்சோமவார தினத்தில் பாற்பொங்கல் செய்து பாலமுது படைத்து, பழம், பாக்கு, மடைபரவி பக்தி பரவசமாய்த் துதித்து, அம்மனை வழிபட்டு வேண்டிய சித்திகளைப் பெற்று உய்த்து வந்தார்கள்.

வேளாண் மரபினைச் சேர்ந்தவர்களே இங்ஙனம் பூசனை செய்யும் பூசாரியாராக இருந்து வந்தனர்.

இவர்கள் மரபு வழி தவறாது பக்தி நிர்ணயத்துடன் இப் பொங்கலைச் செய்து வந்ததுடன், அம்பாளின் அருள் பெற்று அடியார்களின் பிணி நீக்கங்களைச் செய்பவர்களாகவும், நிகழ் தவற்றையும் எதிர்காலத்தையும் பற்றிய சூட்சுமங்களை உரைப்பவர்களாயும் இருந்தார்கள்.

இதனால் இவர்களைக் கட்டு ஆடுபவர்கள் எனவும், கட்டாடி உடையார் என்றும் அழைத்தனர்.

இங்ஙனம் பத்தினித் தெய்வம் நேரில் காட்சி தரிசனமான இத் தலத்தின் மகிமைகளைக் கேள்வியுற்று இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து அடியார்கள் வந்து அம்பாளைத் தரிசித்து வழிபடத் தொடங்கினர்.

மேலும் இவ்வாலயத்தில் அருட் கூடல்களும், பேரற்புதங்களும் நிகழ்ந்துள்ளன. இவைகள் பலவாயினும் ஒன்றை இங்கு குறிப்பிடுகின்றோம்.

போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைப் பிடித்து ஆட்சி செய்த சமயம் முல்லைத்தீவுப் பகுதியை நிர்வகித்த போர்த்துக்கீசப் பறங்கி அதிகாரி ஒருவன், இவ்வம்பாள் தலத்தின் மகிமைதனைக் கேள்விப்பட்டான்.

கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்கு ஒரு கையில் சிலுவையுடனும், ஒரு கையில் வாளுடனும் வந்திருக்கின்ற போத்துக்கேய அதிகாரிக்கு மனம் பொறுக்கவில்லை.

அதனால் இவ்வாலயத்தையும் இடித்துத் தள்ளப் புறப்பட்டான். தனது படை பரிவாரங்கள் புடைசூழ குதிரையில் ஆரோகணித்து இங்கு வந்தவன் இறுமாப்புடன் ஆலயப் பூசகரைக் கூப்பிட்டு 'உனது தெய்வம் உண்மையான தெய்வமெனில் இங்கு இப்பொழுது உனது தெய்வத்தின் மூலம் ஓர் அற்புதத்தைச் செய்து காண்பிக்கவேண்டும்; இல்லையேல் உன்னைச் சிரச்சேதம் செய்வதுடன் இக்கோயிலையும் இடித்துத் தரைமட்டமாக்கி விடுவேன்'' என்று அகந்தை கொண்டு கூறி முடிப்பதற்குள், இவ்வாலயத்தின் தென்புற வீதியில் நிறைந்த காய்களுடன் நின்ற பனிச்சை மரம் ஒன்று தன் பரந்த கிளைகளைச் சுழற்றி வேகமாக ஆடியது.

இதனால் பனிச்சங்காய்கள் எல்லாம் பறங்கியையும், அவன் கூட்டத்தினையும் நோக்கி வீசப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் பத்தினித் தெய்வம்
அருள் பாலிக்க வேண்டுகிறோம்
SANMUGAM-N-SONS
No 14 Main Street,
MULLAITIVU.
தரமான புதுவகை செருப்பு
சப்பாத்து காலணி வகைகள்
மலிவாகக் கிடைக்கும்

சமாதானம் நிலவ, அம்பாளைப்
பிரார்த்திக்கும்
"வெங்கடேஸ்வரா"
பலசரக்கு சில்லறை, மொத்த வியாபார
ஸ்தாபனம்
5, பிரதான வீதி,
முல்லைத்தீவு.

அனைவரும் அருள்பெற
உவர் நீர்த்திபத்தின் ஒளியாய் மிளிரும்
அற்புதத் தாயின் பொற்பதம் போற்றும்
ரெலிகோணர் ஸ்தாபனம்
நவநாகரிக அன்பளிப்புப் பான்ஸிப்
பொருள்களின் ஏகவிநியோகஸ்தர்கள்
ரெலிகோணர்
4', பிரதான வீதி, முல்லைத்தீவு.

குவலயம் ஏற்றிக் குடமுழுக்கும் அம்பாளை
குமரன்ஸ் போற்றி, வாழ்த்தி
வணங்குகின்றது!
குமரன்ஸ்
கிறீம் ஹவுஸ்,
பஸ் நிலையம்,
முல்லைத்தீவு.
தித்திக்கும் தின்சுவைப் பழரசம்
சிற்றுண்டி, ஐஸ்கிறீம் சுவீட் வகைக்கு
சிறந்த ஸ்தாபனம்

## பெருஞ் சாந்தி விழா

**பிரதிஷ்டாகுரு முத்தமிழ் குருமணி**
**சிவஸ்ரீ நா சர்வேஸ்வரக்குருக்கள்**

ஆன்மகோடிகள் உய்வதற்கே ஆலய வழிபாட்டு முறைகள் உள்ளனவாகும்.

எங்கும் நிறை பரம்பொருளை நாம் உணர்தல் வேண்டி அதன் திருவருட் துணையை முன்நிறுத்தி ஐம்பூத வடிவக் கூடாகிய நிருவுருவில் எழுந்தருளும்படியும் அதனின்று அகலாது அருள்புரிந்து காக்கும்படியும் மனம், வாக்கு காயத்தினால் பிரார்த்திக்கும் பெருங்கிரியையே கும்பாபிஷேகமாகும்.

'இவள் போலும் நங்குலத்துக்கோர் இருந் தெய்வம் இல்லை' எனச் சிலம்புபோற்றும் கண்ணகியை— 'ஆங்கு அகந்தை கெடுத்து வரம் தரும் இவள்' எனக் கடல் சூழ் இலங்கைக் கயபாகு மன்னன் போற்றிய பத்தினித் தெய்வத்தை ஆராதிக்கும் வற்றாப்பளை அம்பாளின் அருள்மிகு சன்னிதானம் மெய்யன்பர்களின் பெருமுயற்சிகளால், கவின்பொலிவுறப் புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிகழ்வது அனைவருக்கும நலன் தருவதாகும்.

இப்பெருவைபவத்தில் இணைந்து கொண்ட அனைவருக்கும் சகல ... வாழ்த்துகின்றேன்.



## சக்தி தத்துவம்

'அருளது சக்தியாகும்.
அரன்தனக் கருளையன்றி
தெருள் சிவமில்லை
அந்தச் சிவமின்றிச்
சக்தியில்லை'

-என்பது சைவசித்தாந்த உண்மை.

சிவம் அரியது. சக்தி எளியது.

அருமையின் அழகு சிவமாகும் எளிமையின் அழகு சக்தியாக மிளிர்கின்றது.

சிவம் என்ற பதத்திலேயே இருநிலையும் ஒடுங்கியுள்ளது சி-அரிய படுகின்றன. தடைகளைத் தகர்த்தெறிபவள். எல்லாம் வல்ல பரம்பொருளின் இயங்கும் தன்மையான சக்தி பல பல நாமத்தோடும், வடிவத்தோடும் அன்பர்களுக்குக் காட்சி கொடுக்கின்றது. மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி, சிவகாமி, காளி, துர்க்கை, அபிராமி, கண்ணகி என்பனவெல்லாம் அன்னையின் அடியார்கள் அழைத்து வழிபடும் அற்புத நாமங்கள்.

**துர்க்காதுரந்தரி பண்டிதை**
**தங்கம்மா அப்பாக்குட்டி**

பொருள், வ- எளிய அருள். ''தன்னிலமை மன்னுயிர்கள் சாரத் தருமசக்தி, பின்னமிலான் எங்கள் பிரான்'' அவன் அவளுடன் கொண்ட தொடர்பு அற்புதமானது. அவன் என்றுமே பிரம்மச்சாரி! அவள் என்றுமே கன்னி! அன்றியும் அவள் தாயாய், மகளாய், தாரமாய் விளங்கும் எங்கள் அன்னை,

''வாயும் மனமும்
கடந்த மனோன்மணி,
பேயும் கணமும்
பெரிதுடைப்
பெண்பிள்ளை
ஆயும் அறிவும்
கடந்த அரனுக்கு
தாயும் மகளும்
தாரமும் ஆகும்''
- திருமந்திரம்

அம்பிகையின் சக்தி பேராற்றல் உடையது; சொல்லரிய வேகமும், தீவிரமும் அன்னையின் அருளில் இருந்து வெளிப்

வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஈழத்து சைவ மக்களின் உள்ளத்தில் குடிகொண்ட தேவி.

அங்கு நடைபெறும் 'வைகாசிப் பொங்கல்' விழா, சரித்திரச் சான்றுள்ள பெருவிழா. அன்னையின் அருளாலும், அன்பர்களின் ஆதரவினாலும், இன்று இவ்வாலயம் மேலுஞ் சிறப்புடன் மிளிர்கின்றது.

அம்பாளுடைய உபாசனை, சிரேட்டமும் இரகசியமும் வாய்ந்தது.

இதனை அறிந்து தெளிந்து வழிபடுவோர்க்கு இவ்வுலகில் கிடைக்கக் கூடாத பேறுகள் இல்லை. அம்பாள் திருத்தொண்டில் ஈடுபடுவோர்களின் பூர்வ புண்ணியம் அளப்பரியது. இவற்றைத் தெரிந்து பணிபுரிதல் நம் அனைவரது கடனாகும்.

''சுபம்''

## ஆலயத்தின் வளர்ச்சிக்கு உழைத்தவர்கள்

**சி. விநாசித்தம்பி**
(பரிபாலன சபைத் தலைவர்)

அருள் சொரிந்து அனைவரையும் ஆகர்சிக்கும் அருள் அன்னையின் மகிமையுறு கும்பாபிஷேக தினமான இன்று, அம்பாளின் திருப்பணிகளுடையது. இவர்கள் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்காக அரியன படைத்த பெரியோர்களாவர் இவர்கள் இவ்வழியில் எமக்கும் சிறந்த இறை பணி வழிகாட்டிகளாக வும் அமைந்துள்ளார்கள்.

காரியங்களை செய்து வருகின்ற ... உடைய பெரியோர்களை இத் தருணத்தில் நாம் நினைவு கொள்வது சால்பு

அற்புத சக்திமிக்க இத் தலத்தின் வளர்ச்சிகள்,

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணகை அம்பாளின் பத்தாவது அருட் பீடம்

### நல்லை ஆதீன முதல்வர் அருளாசி

வற்றாப்பளை அருள்மிகு கண்ணகை அம்மன் தேவஸ்தான கும்பாபிஷேகம் இன்று நிகழ இருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கண்ணகை அம்பாளின் பத்தாவது அருட் பீடம் எனப் போற்றப்படும்—

இவ்வாலயத்தின் வரலாறு மிகப்பழையதும். புராதன மகத்துவம் உடையதுமாகும்.

வற்றாப்பளை அம்மனின் அருள் பெற்று உயர்ந்தோர்களின் சரிதைகளும் பல.

எத்தெய்வமாகிலும் சக்தியின் மகிமை விளக்கற்கரியதாகும்.

மனம், வாக்கு, காயம் இவற்றை இஷ்ட தெய்வத்தின்பால் ஒருவழிப்படுத்துவதே தெய்வ வழிபாடு என்பதாயிற்று.

சக்தி வழிபாடாற்றி முக்திப்பேறுற்ற மகான்களின் திவ்விய சரிதைகள் இதற்குச் சான்று பகரும்.

வருடந்தோறும் தேவாலயங்களில் எடுக்கப்படும் திருவிழாக்கள் போலல்லாது இக் குடமுழுக்குப் பெருவிழா சாதாரணமாகப் பன்னிரண்டாண்டுகளுக்குப் பின் எடுக்கப்படுவதால் மகத்துவம்மிக்கதாகும்.

கும்பாபிஷேகம் காண்பது கோடி புண்ணியம்.

அருட்பிரவாகம் அனுபவத்தால் அறியப்பட வேண்டிய ஒன்றாகும்.

இதில் பங்கு கொள்ளும் சிவாச்சாரியப் பெருமக்கள், அறங்காவலர்கள், அயராது தொண்டு புரிந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்த அன்பர்கள், சிற்ப வினைஞர்கள் அனைவருக்கும் அம்பாளின் திருவடிகளைத் தியானித்து எமது உளமார்ந்த நல்லாசிகள் உரியதாகுக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

—ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய ஸ்வாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்

கருணைத்தாய் கண்ணகியை
வாழ்த்தி வணங்குகின்றோம்!
நங்கையரின்
நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும்
ராதா நகைத் தொழிற்சாலை
பிரதான வீதி,
முல்லைத்தீவு.

எத்திசையும் புகழ் மணக்கும்
எப்பிராட்டி தாள் இறைஞ்சும்
லக்ஷ்மி ரேடர்ஸ்
68, பிரதான வீதி,
முல்லைத்தீவு.
புதுவகைப் புடைவைத் தினுசுகள்,
சேட், சூட். றெடிமேட் ஆடைகள்
கிடைக்குமிடம்.

நாடு சுபீட்சமடைய அம்பாள்
நல்லருள் பாலிப்பாளாக!
கசெட் றெக்கோடர் மின்விசிறிகள்,
மணிக்கூடுகள், அன்பளிப்பு பொருள்கள்,
அழகுசாதனப் பொருள்கள், எவர்சில்வர்,
விளையாட்டுச் சாமான்கள்
மலிவாகப் பெற நாடுங்கள்
ராதிகா ரேடர்ஸ்,
77, பிரதான வீதி, முல்லைத்தீவு.

சிலம்பால் அறம் புகட்டிய
தேவி கழல் போற்றி!
உத்தரவாதமுள்ள சகல நகைகளுக்கும்
நீங்கள் நாடுமிடம்
றஜிதா ஜுவல்லறி
( 150,பிரதான வீதி, முல்லைத்தீவு.
புதுப்புது டிசைன் நகைகளை வாங்குங்கள்)

கண்ணகி அம்பாளின் கமல
மலரடிகளை வணங்குவோம்!
"யோகா" நகை மாளிகை
22கரட் தங்க நகைகளுக்கு
நிகரில்லா ஸ்தாபனம்
132, பிரதான வீதி,
முல்லைத்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃபைபர் கிளாஸ் மூலப் பொருட்கள்.
ஓட்டும் பசை, பளபளபூட்டும்,
கேற்ரலிஸ்ற்கள், அக்ஸெலரேற்றர்கள்,
பெயின்ற் சாய வகைகள் போன்ற
தரமான பொருட்கள் நியாய
விலையில் கிடைக்கும்.
பிரதேச வர்த்தகர்கள் தேவை.
தொடர்பு கொள்க:-
ஓர்க்கிட் எஜென்ஸீஸ்.
17/6 விஜயபா மாவத்தை, நாவல வீதிக்கு அப்பால்
நுகேகொட  தொலைபேசி: 553264

---

அருட்தந்தை B. A. தோமஸ் O. M. I.
அடிகளாரின்

## 25 ஆவது ஆண்டு நினைவுதினம்

26-01-1989

திருப்பலிகள்:
தோலகட்டியில்: காலை 7 மணிக்கு.
அருள் ஆச்சிரமத்தில் மாலை 4.30 மணிக்கு

இவர் வழியாக இறைவனை இறைஞ்சுவோம்.
(9077)

---

உ
ஸ்ரீ காமாட்சி அம்பாள் துணை

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!
நிகழும் விபவ வருடம் தை மாதம் 14ஆம் நாள் 27-01-1989 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி முதல் 10.00 மணி வரையிலான மீன லக்கின சுபமுகூர்த்தத்தில்

| திரு. திருமதி தருமலிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் திருநிறை செல்வன் **பாலகிருஷ்ணன் (பாலா)** அவர்களுக்கும் | ★★★★★★ | திரு. திருமதி நாகராஜா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி திருநிறை செல்வி **மனோரஞ்சினி (மனோ)** அவர்களுக்கும் |
|---|---|---|

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய கல்யாண மண்டபத்தில் அம்பாளின் அருளால் நடைபெறும் திருமண வைபவத்தில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

திரு - திருமதி
செ. தருமலிங்கம்
(மயிலிட்டி தெற்கு)
உவுணத்தம்பை றோட்,
குரும்பசிட்டி,
தெல்லிப்பளை.

திரு. திருமதி
கா. நாகராஜா
தலையாழி றோட்,
யாழ்ப்பாணம்.

(9065)

---

## மன்னிப்புச் சபை கவலை

பிரேஸிலியா, ஜன. 25

பிரேஸிலில் கிராம மட்டத் தலைவர்கள் கெரில்லாக்களினால் படுகொலை செய்யப்படுவது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கவலை தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு இயக்கப் பிரமுகரான சிக்கோமென்டிஸ் படுகொலை செய்யப்பட்டார்.

அதைத் தொடர்ந்து அமேசன் கிராமப்பகுதிகளில் பலர் கொல்லப்பட்டனர். (எ)

---

PHYSICS
ஆசிரியர்:
R. சத்தியசீலன்

21, மணத்தரைலேன்,
சந்தர்மடம். (யாழ்.)

---

AL/90
பொறியியல்
✶ நிலையியல் ✶
Mon, Wed, Fri
3.15 p m
இன்று ஆரம்பம்
25-01-89
Wed 3.15 p.m

---

A/L 89
PAPER CLASS
Tue, Thu 3.45 p m
ஆரம்பமாகிவிட்டது.
(C/1361)

---

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினை பெறுவதற்கான

## ★ கம்பியூட்டர் கல்வி ★

Computer Programming and Data Processing in Basic Language

**ஆரம்பம்: 28-1-89** பயிற்சிக்காலம்: 2 1/2 மாதம்

கட்டணம்: 950/- [இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்]

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப்பயிற்சி I B M (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 27-1-89

**UNIKCO COMPUTER CENTRE**
No. 5, POWER HOUSE ROAD.
2nd Lane JAFFNA.
(Near Sub - Post Office)
[C-1528]

---

# கேள்விப் பத்திரங்கள் கோருதல்

## கமநலச் சேவைகள் திணைக்களம், யாழப்பாண மாவட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் திருத்த வேலைகள் மேற்கொள்ளல்

கீழ்க்காணும் கட்டிடத் திருத்த வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து யாழ் மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளரால் 1989ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி காலை 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 1989ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

| வேலை அமைந்துள்ள தேர்தல் தொகுதி | கமநல சேவை நிலைய பிரதேசம் | வேலையின் பெயர் | பதிவு செய்யப் பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. காங்கேசன்துறை | கீரிமலை | கீரிமலை கமநல சேவை நிலையக் கட்டிடத் திருத்தம் | ரூ 100,000/- |
| 2. நல்லூர் | நல்லூர் | நல்லூர் கமநல சேவை நிலைய சுற்றுமதில் (1ஆம் பகுதி) | ரூ 100,000/- |
| 3. நல்லூர் | நல்லூர் | நல்லூர் கமநல சேவை நிலைய சுற்றுமதில் (2ஆம் பகுதி) | ரூ 100 000/- |
| 4. உடுப்பிட்டி | புலோலி | புலோலி கமநல சேவை நிலைய கட்டிட திருத்தம் | ரூ 100,000/- |
| 5. கோப்பாய் | நீர்வேலி (உரும்பிராய்) | உரும்பிராய் கமநல சேவை நிலைய கட்டிட திருத்தம் | ரூ 200,000/- |
| 6. கோப்பாய் | நீர்வேலி (உரும்பிராய்) | உரும்பிராய் கமநல சேவை நிலைய சுற்றுமதில் | ரூ 200,000/- |
| 7. கோப்பாய் | புத்தூர் | புத்தூர் கமநல சேவை நிலைய கட்டிட திருத்தம் | ரூ. 200,000/- |

மேலதிக விபரங்கள், யாழ் மாவட்ட கமநலச் சேவைகள் சிரேஷ்ட உதவி ஆணையாளர் அலுவலகத்தில், அலுவலக நாட்களில் காலை 9.00 மணிமுதல் பி.ப 4.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கமநல சேவைகள் திணைக்களம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
1989-01-20

க. பரமலிங்கம்
சிரேஷ்ட உதவி ஆணையாளர்,
கமநல சேவை,
யாழ் / மாவட்டம்.
(C/1340)

---



பி. வி. சி. குழாய்கள் வாங்கும்போது
**S-Lon எஸ் லோன் என்று கேட்டு**
பார்த்து, உறுதிப்படுத்தி வாங்குங்கள்

S-Lon The No.1 PVC pipe

An associate of The Maharaja Organisation Limited 1939-1989 50 YEARS The courage to be different.

உறுதிக்கும் நீண்டகாலப் பாவிப்புக்கும்
உகந்த பி.வி.சி. குழாய்கள் எஸ் லோன் குழாய்களே
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எஸ் லோன் குழாய்களின் தரத்திற்கு வேறெவையும் நிகரல்ல

**S-Lon Lanka (Pvt) Ltd.**
467, UNION PLACE, COLOMBO-2. T'PHONE: 586206 — 83716-9

---

## காணவில்லை

ஸ்கூட்டர் சில்லு - வாகனத்தின் மேலதிக சில்லு, 23-1-89 ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்குப்பின் கல்வியங்காடு G. P. S வீதி, ராமலிங்கம் வீதி, திருநெல்வேலி சிவன்கோவில் வீதி, பலாலி வீதி, கந்தர்மடம் சந்தி, அரசடி வீதி, காங்கேசன்துறை வீதி வழியாக வரும்போது உடைந்து விழுந்துவிட்டது. அதனை எடுத்து பின்வரும் விலாசத்தில் ஒப்படைப்போருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

46, பிரப்பங்குளம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
[9068]

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி இராசரத்தினம் ஜெனனி (ஜெனு)**

தோற்றம்: 11-03-84  மறைவு: 25-01-87

திதி. 25-01-89

எங்கள் அன்புச் செல்வமே! ஜெனு!! உங்களைப்பிரிந்து ஈராண்டு ஆகுதம்மா! உன் பிஞ்சு முகம் காணாது ஏங்குகின்றோம். எங்களை ஏங்க வைத்து விட்டு எங்கே ஓடி மறைந்தாயம்மா?

உனது பிரிவால் துயருறும்,
அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணன்மார், அம்மம்மா,
உற்றார், உறவினர்கள்.

சுதுமலை தெற்கு,
ஆனைக்கோட்டை.
(9273)

---

## கேள்விப்பத்திரம்

**வெற்றுச் சாக்கு விற்பனை**
**வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 6500 வரையிலான வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா 5/- கேள்விப் பத்திரப் பணமாகவும் ரூபா 250/- கேள்வி வைப்புப் பணமாகவும் செலுத்தி கேள்வி விண்ணப்பப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம். வெற்றுச் சாக்குகளின் தரத்தினையும் வகையினையும் சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் மூன்று நாட்களுள் முழுப் பணத்தையும் செலுத்தி வெற்றுச்சாக்குகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

விண்ணப்பம் ஏற்கும். கடைசித் திகதி 1989-02-01 புதன் பகல் 12.00 மணி

பொதுமுகாமையாளர்.
வேலணை ப. நோ. கூ. சங்கம்.
(C1360)

---

## அறிவித்தல்

**வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை**
**நீர்வேலி, கோப்பாய், உரும்பராய், புத்தூர், அச்சுவேலி உப அலுவலகங்கள்**

## வீடமைப்பு நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம்

மேற்படி கட்டளைச் சட்டம், அது தொடர்பான உப விதிகள், சுற்று நிருபங்கள் ஆகியவை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை எல்லைக்குள் சகல பகுதிகளிலும் அமுல் படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இப்பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் நீர்வேலி, கோப்பாய், உரும்பராய், புத்தூர், அச்சுவேலி ஆகிய உப அலுவலகப் பகுதிகளில் சபை அங்கீகாரமின்றி கட்டடங்கள் அமைக்கக் கூடாது என்பதை பொது மக்களுக்கு அறியத் தருகிறேன்.

க. குலேந்திரா,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை,
வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை அலுவலகம்.
நீர்வேலி, 20-01-1989.  (C/1358)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்கும் தன்மை யவர்.

**பொருள்:**
இகலை எதிர்த்து நிற்காமல் அதன் எதிரே சாய்ந்து நடக்க வல்லவரை வெல்லக் கருதுகிற ஆற்றல் உடையவர் யார்?

**உதயன்**
உண்மை - விஞ்ஞானம் - ஒரு நிஜம்
இல. 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
25. 1. 1989 உ. பெ. இல 25

# வேண்டுமா சோதனை?

**சோ**வியத் ரஷ்யாவில் கடந்த திங்கட்கிழமை மற்றொரு பூமி அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. முதலில் கிடைத்த தகவலின்படி சுமார் 1,500 பேர் அதனால் உயிரிழந்ததாக மதிப்பிடப்பட்டது.

இது சோவியத் மக்களுக்கும், அவர்களின் தலைவர் கோர்பச்சேவுக்கும் பெரும் சோதனையாகும்.

கடந்த மாதம் (டிசம்பர்) 7 ஆம் திகதி தான் உலகம் இதுவரை காணாத அளவுக்கு பூமியதிர்ச்சி அனர்த்தம் சோவியத் ரஷ்யாவைத் தாக்கியது.

ஆர்மேனிய மாநிலத்தில் உண்டான அந்தப் பூமி அதிர்ச்சியினால் இரண்டு பெரும் நகரங்கள் அடியோடு அழிந்தன. ஸ்பிராக் என்ற மாவட்டம் முற்றாகத் தரைமட்டமாகியது.

குறைந்தது 50,000 பேர் இறந்திருப்பர் என மதிப்பிடப்பட்டது. 21, 755 சடலங்கள் அடையாளம் காணப்பட்டன. ஏனையோரின் சிதைந்த உடல்களையே, கைகள், கால்கள் வெவ்வேறாக எடுக்க முடிந்தது. நூற்றுக்கணக்கானோர் இடிபாடுகளுக்குள் இருந்து பல நாட்களின் பின்னரும் மீட்கப்பட்டனர். 1,30,000 பேர் காயமுற்றிருந்தனர். சுமார் 5,00,000 பேர் தமது வீடுகளை இழந்தனர்.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னர் உலக நாடுகள், குறிப்பாக மேற்கு நாடுகள் ரஷ்யாவிற்கு உதவுவதற்கு பெரும் எண்ணிக்கையில் முன்வந்தன.

அமெரிக்கா, மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் உட்பட 67 நாடுகள் மீட்பு, நிவாரண உதவிகள் புரிந்தன. விமானம் விமானமாக மருந்துகளும், வைத்திய உதவிப் பொருள்களும் வெளிநாடுகளில் இருந்து குவிக்கப்பட்டன.

ஆனால் மீட்பு, நிவாரண வேலைகள் உரிய முறையில் ஒழுங்குபடுத்தப்படாமலும், திட்டமிட்டு வகுக்கப்படாமலும் செய்யப்பட்டதால் சரிவர நடக்கவில்லை என்று சோவியத் நிர்வாகம் மீது குறை கூறப்பட்டது. வெளிநாட்டு நிவாரண உதவிகள், நிவாரணப் பணிகள் ஒரு மத்திய நிறுவனத்தின் மூலம் ஆற்றுப்படுத்தப்படாமையால், அவை இடைநடுவில் நிறுத்தப்பட்டதும், திருப்பி அனுப்பப்பட்டதும் உண்டு.

ஐ. நா. மாநாட்டில் உரையாற்ற நியூயோர்க் சென்றிருந்த ரஷ்யத் தலைவர் உலக அமைதிக்கான முன்சமிக்ஞைகளைக் (வார்சோ நாடுகளிலிருந்து சோவியத் துருப்புகளையும், போர்க் கருவிகளையும் வாபஸ் பெறுதல்) காட்டியவேளையில் ஆர்மேனிய பூமியதிர்ச்சி அவரது நாட்டை ஆட்டம்காண வைத்தது; மக்களைக் கலக்கியது.

எனினும் அந்தப் பூமியதிர்ச்சியே ரஷ்யாவையும் மேற்கு உலகையும் நெருக்கமாகப் பழகவும் வைத்தது; நிவாரணம், மீட்பு என்ற பெயரில் உதவவும் வைத்தது. இரு சாராருக்கும் இடையில் — தலைவர்களுக்கு இடையில் மட்டுமன்றி, மக்களுக்கு இடையேயும் — மனிதாபிமான ரீதியில் ஒரு நெருக்கம் உண்டானது எனலாம்.

இந்த மாத ஆரம்பத்தில் திரு. கோர்பச்சேவ் இரசாயன ஆயுதங்கள் உற்பத்தியை தமது தரப்பில் நிறுத்துவது குறித்தும், ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட இருப்பை அழிப்பது குறித்தும் அறிவித்தார்.

அந்த அறிவிப்பின் பதியில் மீண்டும் அவரது சொந்தநாட்டில் இயற்கை தனது அனர்த்தத்தைப் புரிந்து வேதனை விளைவித்திருக்கிறது.

திரு. கோர்பச்சேவ் உலக அரங்கில் அமைதிக்கான கால்கோள்களை நடத்தத் தொடங்கும்போதெல்லாம், அவரது சொந்த நாட்டில் சோதனை வருவது ஏனோ?

உலக அரங்கில் மட்டுமன்றி, சோவியத் யூனியனும் மறுமலர்ச்சி காணவேண்டும் என்று எண்ணுகிறார் திரு. கோர்பச்சேவ். ''பிறிஸ்ரோக்கா'' என்ற அவரது புதிய பொருளாதார வளர்ச்சித் திட்டம் அந்த எண்ணத்தினையே பிரதிபலிக்கிறது.

பூமி அதிர்ச்சிகள் அடுத்தடுத்து வந்து சொந்தநாட்டை நிலைகுலைய வைக்கும்போது, பொருளாதார மறுமலர்ச்சியை எங்ஙனம் ஏற்படுத்துவது?

கோர்பச்சேவுக்கு உள்நாட்டில் ''சோதனைமேல் சோதனை போதுமடா சாமி'' என்று உலகமக்கள் இயற்கையிடம் கூற வேண்டும் போலத் தோன்றுகிறது அல்லவா?

மனித குலத்தின் நன்மைக்குப் பாடுபடத் துடிக்கும் ஒருவருக்கு இப்படிச் சோதனை வேண்டுமா?

உயர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு இணங்க

# பலுசிஸ்தான் சட்டசபை மீண்டும் கூட்டப்படும்

இஸ்லாமபாத், ஜன. 24

கலைக்கப்பட்ட பலுசிஸ்தான் சட்டசபையை மீண்டும் கூட்டும்படி பாகிஸ்தான் உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கடந்த நவம்பரில் பாகிஸ்தானில் நாடாளுமன்றத் தேர்தலும் சட்டசபைத் தேர்தல்களும் நடந்தன.

அப்போது பலுசிஸ்தான் சட்டசபையும் தெரிவானது. 23 தினங்கள் கழித்து சட்டசபையை முதலமைச்சரின் சிபார்சு மீது மாகாண ஆளுநர் கலைத்து விட்டார்.

நம்பிக்கை வாக்கெடுப்பு ஒன்றைச் சட்டசபையில் நடத்தாமல் எப்படி கவர்னர் சட்டசபையைக் கலைக்க முடியும்? என்று உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து வாதாடப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம் கலைக்கப்பட்ட சட்டசபையை மீண்டும் கூட்டும்படி நேற்று மாகாண ஆளுநருக்கு உத்தரவிட்டது.

தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப்போவது இல்லை என்று மாகாண ஆளுநர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ)

## பிரெஞ்சு முயற்சி

கம்பூச்சியப் பிரச்சினைக்கு தீர்வுகாண சர்வதேச மாநாடு ஒன்றை நடத்த பிரெஞ்சு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்பிரச்சினை தொடர்பாக சகல தரப்பினரையும் இம் மாநாட்டில் கலந்து கொள்ள வைப்பதில் பிரெஞ்சு அரசு ராஜதந்திர நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது.

# ராஜீவ் பதவி விலகவேண்டும் வி.பி. சிங் கோரிக்கை

இந்திரா காங்கிரஸ் இனியும் நாட்டை ஆள முடியாது. அத் தகுதி பிரதமர் ராஜீவ் காந்திக்கு இனியும் கிடையாது.

ஜனதா தள் தலைவர் வி. பி. சிங் நேற்று செய்தியாளரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத்தேர்தலை திரு. காந்தி நடத்தவேண்டும் என்றும் திரு. சிங் சொன்னார்.

பிரதமர் காந்தியின் அரசு உடனே ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று இந்தியாவின் பல எதிர்க் கட்சிகள் கோரியுள்ளன. (எ)

## கவர்ச்சி அரசியல் முடிந்துவிட்டது; பெண் எம்.பி கருத்து

சென்னை, ஜன 24

கவர்ச்சி அரசியலுக்கு தமிழ்நாட்டில் முடிவு கட்டப்பட்டுவிட்டது.

ஜெயந்தி நடராஜன் எம். பி இப்படி செய்தியாளரிடம் சொன்னார்.

தமிழக அரசியலில் இத் தேர்தல் ஒரு திருப்புமுனையாக அமைந்துவிட்டது.

சித்தாந்த ரீதியில் தமிழக மக்கள் சிந்திக்கத் தலைப்பட்டு விட்டார்கள் என்று இந்திரா காங்கிரஸ் எம். பியான ஜெயந்தி நடராஜன் சொன்னார்.

**மூப்பனார்**

அதிக இடங்களை எதிர்பார்த்தோம். நடக்கவில்லை.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி. கே. மூப்பனார் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களின் தீர்ப்புக்குத் தலை வணங்குகிறோம்.

தமிழ்நாடு முழுவதும் காங்கிரஸுக்குக் கிடைத்த வாக்குகள் பற்றிய விவரம் கிடைத்த பின்னர் தான் கருத்துக் கூற முடியும் — என்று மூப்பனார் சொன்னார். (ஒ-எ)

## வட வியட்னும் தலைவர் புதுடில்லிவிஜயம்

புதுடில்லி, ஜன. 24

வியட்னும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. குவேன்லின் இன்று புதுடில்லிக்கு விஜயம் செய்கிறார்.

இந்தியக் குடியரசு தின விழாவில் பிரதம விருந்தினராகவும் இவர் கலந்து கொள்வார்.

பிரதமர் காந்தியுடன் மூன்று சுற்றுக்கள் இவர் பேசுவார். (எ)

# மிஸோரம், நாகலாந்து இந்திரா காங்கிரஸிடம்

புதுடில்லி, ஜன 24

நாகலாந்து, மிஸோரம் மாநிலங்களுக்கான சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வெற்றியீட்டியது.

40 தொகுதிகளைக் கொண்ட மிஸோரம் சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் 22 இடங்களில் வெற்றியீட்டியது. இன்னும் ஓர் தொகுதியின் முடிவு வர வேண்டியுள்ளது.

60 உறுப்பினர்களைக் கொண்ட நாகலாந்து சட்டசபையில் 31 இடங்களை இந்திரா காங்கிரஸ் பிடித்தது. இன்னும் 8 தொகுதிகளின் முடிவுகள் வர வேண்டியிருந்தது. (எ)

# கலைஞரின் முதற் பயணம் கல்கத்தாவுக்கு

எதிர்க்கட்சிகள் ஆட்சி நடத்தும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாடு இம்மாதம் 28 ஆம் திகதி கல்கத்தாவில் நடைபெற உள்ளது.

அந்த மாநாட்டில் தமிழகத்தின் முதலமைச்சர் என்ற முறையில் கலைஞர் கருணாநிதி கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

# வெள்ளி விழா வேட்பாளர் வீரப்பக் கவுண்டர்

டெல்லியை கைப்பற்ற கஜினி முகமது படையெடுத்தது போல பல தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர் வி. டி. ஆர். வீரப்ப கவுண்டர் 48 வயதாகும். இவர் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

இப்போது தமிழக சட்டசபைத் தேர்தலில் 8 தொகுதிகளில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார்.

ஆரம்பகாலத்தில் வீரப்பக்கவுண்டர் தீவிரமான காங்கிரஸ்காரர் 1962 ஆம் ஆண்டு நடந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில போட்டியிட டிக்கெட் கேட்டார். தரப்படவில்லை. மீண்டும் 1967 -இல் கேட்டார். அப்போதும் அவருக்கு கொடுக்கப்படவில்லை. இதனால் வெறுப்படைந்து காங்கிரசை விட்டு வெளியேறினார்.

ஆனாலும் வீரப்பக் கவுண்டர் முதன் முதலில் போட்டியிட்டது 1977 -ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில்தான். அப்போது செங்கல்பட்டு எம். பி. தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட்டு தனது கணக்கை தொடங்கினார்.

அதன்பின்பு 1978-இல் கர்நாடக மாநிலத்திலுள்ள சிக்மகளூர் பாராளுமன்ற தொகுதியில் இடைத் தேர்தல் நடந்தது, இதில் மறைந்த பிரதமர் இந்திராகாந்தியை எதிர்த்துப் போட்டியிட்டார்

இதே போல 1980- ஆம் ஆண்டு இந்திராகாந்தியை எதிர்த்து ரேபலி எம் பி. தொகுதியில் மீண்டும் போட்டியிட்டார். அப்போது 9, 000 ஓட்டு பெற்றார்

கடந்த ஆண்டு அலகாபாத் எம் பி தொகுதியில் தனது 16 ஆவது முயற்சியாக வி பி. சிங்கை எதிர்த்து போட்டியிட்ட போது 5, 800 ஓட்டுகள் கிடைத்தன.

இதுவரை 6 எம் பி. தொகுதிகளிலும் 10 தமிழக சட்டசபை தொகுதிகளிலும் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பினை இழந்த வீரப்பக்கவுண்டர் எந்த தேர்தலிலும் டெபாசிட் தொகையை திரும்ப பெற்றதாக சரித்திரமில்லை-

இதற்கு முன்பு, போட்டியிட்ட 16 தொகுதிகளிலும் தேர்தல் செலவாக மட்டும் ரூ. 13 லட்சத்து 50 ஆயிரம் செலவு செய்திருப்பதாகவும் இதற்காக தனது சொத்துக்களை விற்று தேர்தலில் போட்டியிட்டதாகவும் கூறுகிறார்.

நடந்து முடிந்த தேர்தலில் தி.மு.க தலைவர் கருணாநிதியுடன் துறைமுகம் தொகுதியிலும்.

காங்கிரஸ் தலைவர் மூப்பனாரை எதிர்த்து பாபாநாசம் தொகுதியிலும்

ஜெயலலிதாவை எதிர்த்து போடிநாயக்கனூர் தொகுதியிலும் போட்டியிட்டு கட்டுப்பணத்தை இழந்த இவர் வேறு ஐந்து தொகுதிகளிலும் தோல்வியடைந்து விட்டார்.

24 தேர்தல்களைச் சந்தித்து விட்டேன் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் ராஜீவ் காந்தியை எதிர்த்துப் போட்டியிட்டு எனது தேர்தல் வெள்ளிவிழாவைக் கொண்டாடவுள்ளேன்'' இப்படி அவர் அறிவித்திருக்கிறார். (எ-ச)

# வன்னித் தலத்தில்.....

[முன்பக்கத் தொடர்ச்சி]

பட்டன.

பனிச்சங் காய்களால் அடிபட்ட பறங்கி குழறியடித்துக்கொண்டு ஓடினன் எனினும் ஓட ஓடப் பனிச்சை மரம் தனது காய்களால் எறிந்து துரத்தியடித்தது. அட்டகாசமாக வந்த பறங்கிஅலங்கோலமுற்று முல்லைத்தீவை அடைந்தான்.

எனினும் அவனும் அவனது படைகளும் வெப்பு நோயால் பீடிக்கப்பட்டு வருந்தினனர். எல்லாம் வற்றாப்பளையின் அம்பாளை அவமதித்ததால் வந்த வினைகள் என்றுணர்ந்து இப் பறங்கி தன் பிழை பொறுக்குமாறு நேர்த்தி செய்து அம்பாளை வழிபட்டு இடர் நீங்கப்பெற்றான். ''பனிச்சை ஆடிய சிந்து'' என்ற பாடலில் இவ் அற்புதம் கூறப்படுகின்றது.

இத்தலத்திற்கு ''பக்தஞானி'' என்றும் ஓர் அம்பாள் - உபாசனைப் பெரியார் ஒருவர்வருகை தந்து இங்குநடைபெறும் பொங்கல் வழிபாட்டுக்கு பத்தி முறை ஒன்றை ஏற்படுத்தினர் என்பதற்குச் சான்றுகள் உள.

மகிமைப் பிரசித்தமுடைய இத்தலத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் வைகாசிப் பொங்கல் விழாவிற்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகை தந்து பல்வேறு விதத்தில் நேர்த்திக் கடன்களை நிறைவுசெய்து வழிபாடாற்றிச் செல்வர்.

குறிப்பாக யாழ்ப்பாணப்பகுதியினைச் சேர்ந்த பருத்தித்துறை, கரவெட்டி, நெல்லியடி ஆகிய வடமராட்சியில் உள்ள மக்கள் ஏனையோரைவிடக் கூடுதலாக வருகை தருவார்கள்.

இப்பகுதிவாழ் மக்கள் கரையோரம் கால்நடையாகவும், கடல்வழியாகப் பெரிய வத்தைகளிலும் இத்தினத்துக்குவருவார்கள். நமது காலத்திலேயே பாரிய பல வத்தைகள் மூலம் முல்லைத்தீவை அடைந்து அங்கிருந்து கால்நடையாக வற்றாப்பளையை அடைவார்கள்.

பத்தினித் தெய்வத்தில் மிகு பத்தியுடைய இவர்களில் கடல்வழிப் பிரயாணம் காலவோட்டத்தில் அருகிவிட்டதாயினும், இன்றும் இவ்வடியார்கள் கால்நடையாகவும் வண்டிவாகனங்களிலும்தொடர்ந்துவருகிறார்கள்.

இங்கு பொங்கல் நடைபெற்ற மறுநாட்காலை, கதிர்காமம் செல்லும் கரை யாத்திரிகர்கள், கண்ணகித் தாயாரிடம் தங்கள் யாத்திரை தொடங்குவதற்கான உத்தரவை வேண்டி, ஆடிப்பாடி, ஆனந்தக் கண்ணீருகுத்து ஆலயத்தை வலம் வந்து அவள் அருள் சுரக்கத் தமது யாத்திரையை இங்கிருந்து தான் முதலில் தொடங்குகின்றனர். இதுவும் இத்தலத்தின் இன்னோர் சிறப்பாகும் அம்பாளும் இவர்களுடன் கதிர்காமம் யாத்திரை செல்கிறாள் என்பதும் ஐதீகம்.

இங்ஙனம் தெய்வீகம் நிறைந்த இத்தலத்தின் வழிபாட்டு அடியார்கள் பெருக்கம் காரணமாக இவ்வாலயம் காலத்துக்குக்காலம் வளர்ச்சியுற்று வந்தது எனினும் 1956 ஆம் ஆண்டிற்கு முன் தனியார் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த இக் கோயில் அவர்களின் காலத்தில் கவனிப்பின்றி இருந்தது.

இதனால் இவ்வாலயத்தை அடியார்களின் பொதுவானதாக்க வேண்டுமென்ற அநேக மெய்யன்பர்களின் தளரா முயற்சியினால் இவ்வாலயம் பரிபாலன சபை நிர்வாகத்துக்[illegible] [illegible]ட்பட்டது. [illegible]

ளும் சட்ட பூர்வமான தொரு பரிபாலனசபை 1956 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டமை இவ்வாலய வரலாற்றின் ஒரு பொற்காலமாகும்

அன்றுதொட்டுஇன்றுவரை இப்பரிபாலன சபையின் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுவந்துள்ள இறைத்தொண்டுணர்வுடைய திறமைசாலிகளின் முயற்சிகளினால் அன்று கொட்டிலாய் இருந்த கோயில், இன்று கோபுரங்களுடன் காட்சியளிக்கின்றது.

இதனால் இவ்வாலயம் வன்னி நகரிலே முதன் முதலாக இராஜகோபுரம் அமையப்பெற்ற தலம் என்ற பெருமையையும் உடையதாக விளங்குகின்றது

பூசனை வழிபாடுகளும் விரிவாக்கப்பட்டுள்ளன. அந்தணர்களால் நித்திய, நைமித்திய, காமிய வழிபாடுகள், பூசைகள் நடைபெறுவதற்குஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு, மரபு வழிபாடும். ஆகமவழிபாடும் நடைபெற்று வருகின்றன.

விநாயகர். வைரவர், நாகதம்பிரான், சண்டேஸ்வரி ஆகிய பரிவார மூர்த்த வழிபாட்டுவசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இங்ஙனம் இவ் வழிபாட்டுத் தலம், தானை புனித வளர்ச்சி அடைந்து வந்துள்ள தன் பாதையில் இப்பிரதேசத்தில் சைவமும் தமிழும் தமிழர்தம் பாரம்பரியங்களும் சேர்ந்து வளர வாய்ப்பளித்துவந்துள்ளது.

இப்பகுதிவாழ் மக்கள் இறைபக்தியுடையவர்களாகவும் சமய ஈடுபாடுடையவர்களாகவும் வாழ்வதுடன் இத்தலத்திற்கு வருடா வருடம் பொங்கல் தினத்திற்கு வரும் அடியார்களை உபசரித்து, அன்னதானமளித்து, பால், [illegible] [illegible], பல

காரம், நறுங்கனி வகைகள் தேடிக் கொடுத்து விருந்தோம்பும் பண்பில் இன்றுவரையும் குறைந்திலர்

கோவலன், கண்ணகி, நாட்டுக் கூத்துக்கள், சிலம்பு கூறல். காவியம், அம்மன்சிந்து, வயந்தன் கோலாட்டம், பங்குனி மாதத்துக் கண்ணகி விழா ஆகியன முத்தமிழும்இத்தலத்தில்வளர்க்கப்பட்டு வரப்படுவதற்குச் சான்றுகளாகும்,

இங்ஙனம் சைவ,தமிழ் கலாசாரப் பாரம்பரியங்களைப் பிரதிபலிப்பதுடன் பிறசமயத்தவர்களும் வந்து வணங்குகின்ற தேசிய ஒருமைப்பாட்டுச் சிறப்பு முடையதாகவும் இது விளங்குகின்றது

இவ்வாலயம் மேலும் தெய்வீகம் பெற புனர்நிர்மாணத் திருப்பணிகள் பல மேற்கொள்ளப்பட்டு. தூபிகளில் கண்ணகி அம்பாளின் திரு அவதாரத்தையும். இத்தலத்தின் வரலாற்றையும் சித்திரிக்கின்ற சிற்ப விக்கிரக வர்ண அலங்கார சித்திர வேலைகள் செய்யப்பட்டு, அம்பாளினதும், துவாரபாலகிகளினதும் சிற்பங்கள் மேற்குப்புற வாயிலில் அமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் விளங்குகின்றது.

இன்று நடைபெறும் அம்பாளின் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) வைபவத்தையொட்டி விசேஷ யாகசாலைகளும் அழகுற அமைக்கப்பட்டுள்ளன

இங்ஙனம் இத்தலமானது தன் வரலாற்றில் சிறப்பு எழுச்சியுடையதாய் வளர்ச்சியுறுகின்றது அடியார்களும் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள கருணைப் பூமி கண்ணகி அம்பாளின் பாதாரவிந்தங்களைப் பற்றிப் பாவங்களைக் களைந்து நற்கதியடைந்து வருகிறார்கள்.

# ஆலயத்தின்....

[முன்பக்கத் தொடர்ச்சி]

திருப்பணிகள் 1956 ஆம் ஆண்டு இவ்வாலயத்தில் பரிபாலன சபையின் உருவாக்கத்தின் பின்பே எழுச்சியுற்றன. இவ்வகையில்பரிபாலனசபையைத் தோற்றுவிப்பதற்கு, வற்றாப்பளை அமரர் கதிர்காமு பொன்னையா,முள்ளியவளையின் பழைய தபால் அதிபரான அமரர் பொன்னையா என்பவர்கள் முன்னோடிகளாயிருந்த பெரியோர்களாவர்;

இவர்களது வேணவாவின் காரணமாக, பரிபாலனசபையினைத் தோற்றுவிப்பதில் இருந்த முட்டுக்கட்டைகள், இடர்பாடுகள் கெடுபிடிகள் யாவற்றையும் தகர்த்து, மக்கள் பங்குகொள்ளும் சட்ட பூர்வமானதொரு பரிபாலன சபையை ஏற்படுத்தியவர்கள் அமரர்களான முல்லைத்தீவு முகாந்திரம் ஆ. மு. சபாபதி அவர்களும், வழக்கறிஞரான ரி. எம் சபாரத்தினமும் ஆவர்.

பல அபிமானிகள் இவர்களின் இவ்வரிய முயற்சிக்குப் பக்கபலமாக நின்று உதவினர் இவர்களின் பாரட்டத்தக்க பணிகளைத் தொடர்ந்து தா. குமாரையா அவர்களின் முயற்சியும் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு உதவின

அம்பாளின் அருளினாலும், இப்பெரியோர்களது அயராத முயற்சிகளாலும் மிதந்து சிறப்புற விளங்கும் இவ்வாலயத்தின் இராஜகோபுரத் திருப்பணியின் அங்குரார்ப்பண வைபவம் சைவ அபிமானியும் கொடைவள்ளல் உரிமையாளருமான அமரர் நா. இரத்தினசபாபதி அவர்கள் நிதி குவைகளித்து ஆரம்பித்துள்ளமையைப் பெருமையுடன் நினைவு கூருகின்றோம்.

அடியார்களின் பேருதவியுடன் இராஜகோபுரத் திருப்பணியும் மிக விரைவில்பூர்த்தியடையவுள்ளன. வன்னியின் பாரம்பரியங்களை உடைய இத்தலத்தின் எதிர்காலத் திருப்பணிகள் நிறைய உளவாயினும், பின்வரும் பணிகள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

★ இத்தலத்தில் வருடா வருடம் பங்குனியில் நடைபெறும் கண்ணகி விழாவைப் பெருவிழாவாக ஏற்பாடு செய்து அம்பாளை வெள்ளி இரதத்தில் ஊர்வலமாகப் பவனி வரச்செய்தல்

★ கண்ணகி அம்பாளின் தெய்வீக வரலாற்றையும் இவ்வாலய வரலாற்றையும்சித்தரிக்கும் சிற்ப ஓவிய, அரும் பொருட்காட்சி கலா மண்டபம் ஒன்றை அமைத்து அடுத்த தலைமுறையினரும் அறியக் கூடியதாகச் செய்தல்,

★ சமய நூல் நிலையம் ஒன்றை ஏற்படுத்துதல்.

இத் அறைசார்ந்த உதவிகளை நல்குமாறு அனைவரையும் வேண்டுவதுடன், அம்பாளின் திருத்தொண்டுகளில் பங்கு கொண்டும், அபிஷேக, பூசனைகளும் திருப்பணிகளுக்கும் வழங்கும் ஏனைய அன்பர்களுக்கும் இச்சுப தினத்தில் எமது இதயநன்றி அம்பாள் கடாட்சம் அனைவருக்கும் உண்டாவதாக!

## வாசிகசாலைக்கு மின் இணைப்பு

சுழிபுரம், ஜன 25

வலிகாமம் மேற்கு பிரதேசசபை சுழிபுரம் உப அலுவலகம் நடத்தும் நூல்நிலைய வாசிகசாலை, வைத்தியசாலைகளுக்கு உடனடியாகத் [illegible] விமான மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது

பிரதேச சபை ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் எடுத்த துரித நடவடிக்கை தொடர்ந்து நூல்நிலையம் சிறந்த [illegible]த்தில் செயல்படுகிறது. (ச-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

25 01 1989 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகடடிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறுபஜ வர்ண நிழற்படச் சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள

## டெலிவிஷன் வாங்க கடன்

கொழும்பு, ஜன 25
டெலிவிஷன் மற்றும் நவீன மின் உபகரணங்கள் வாங்கக் கடனுதவி வழங்கும் திட்டம் ஒன்றை மக்கள் வங்கி நடைமுறைப்படுத்த உள்ளது.

இதற்காக 50 ஆயிரம் ரூபாவரை ஆண்டுக்கு 20 சதவீத வட்டியில் மக்கள் வங்கி கடன் வழங்கும்.

இக்கடன் 3 ஆண்டுகளுக்குள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

**FOR SALE**

New 4 burner Kenwood Electric Cooker.

Please call over at
**SHABRA,**
Power House Road,
JAFFNA. (C 1371)

St. JOHN'S COLLEGE, JAFFNA
**Old Boys' Association**

Notice is given of the Annual General Meeting of the St. John's College. Jaffna Old Boys' Association on Saturday 11th February 1989 at the College.

**Programme for the day**

7.00 a.m. Holy Communion
8.00 a.m. Laying of Foundation stone for the new Science Laboratory.
8.30 a.m. Fellowship Breakfast.
9 15 a.m. Annual General Meeting
10.30 a.m. Cricket Match Old Boys Vs. Present Boys.
12 30 p.m. Lunch
1.30 p.m. Cricket Match (Continued).
4.00 p.m. Principal's Tea
5.00 p.m. Soccer Match - Old Boys Vs. Present Boys.

Lunch Tickets: Rs. 30.00
Obtainable: Mr. J. N. Ponniah
St. John's College.

The Association is updating its membership register and requests all members to notify to the Secretary their change of address.

Old Boys who have not yet enrolled as members are requested to apply on forms available from Secretary or Treasurer.

S. Sivathasan, President.
K. N. Y. Maurice, Secretary.
St. John's College, Jaffna.
(C/1550)

ஆசிரியர் சம்பள விநியோகம் உட்பட

# வட்டார கல்வி பணிமனைக்கு கூடுதலான அதிகாரங்கள்

கொழும்பு, ஜன 25
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் அலுவலகங்களின் கீழ் இயங்கக்கூடியதாக வட்டாரக் கல்விப் பணிமனைகள் அபிவிருத்தி செய்யப்படும். இப் பணிமனைக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படும்.

பாடசாலை ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவது முதல் பல விடயங்கள் இந்தப் பணிமனையின் அதிகாரத்துக்குக் கீழ் கொண்டுவரப்படும்.

கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவின் உத்தரவின் பேரில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

படிப்படியாக வட்டாரக் கல்வி அதிகாரிகளின் அதிகாரங்கள் விஸ்தரிக்கப்பட்டு அப்பிரதேச நிர்வாகப்பொறுப்புக்கள் அனைத்தும் வட்டாரக் கல்வி அதிகாரிகளிடமே ஒப்படைக்கப்படும்.

ஆரம்பகட்டமாக அடுத்த மாதம் முதல் ஆசிரியர்களுக்கான சம்பளம் வட்டாரக்கல்வி அதிகாரிகளின் அலுவலகங்கள் மூலம் வழங்கப்படும்:

இதுவரை காலமும் பிரதேசக் கல்விப்பணிப்பாளர்களின் மூலமாகவே சம்பள விநியோகம் நடைபெற்று வந்தது என்பது தெரிந்ததே.

இப்பொழுது உள்ள பிரதேச மற்றும் மாவட்டக் கல்விப்பணிப்பாளர்கள் முறை ஒழிக்கப்பட்டு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகங்கள் உருவாக்கப்படும்

மாவட்டக் கல்விப் பணிப்பாளர் அலுவலகங்களுக்குப் பதிலாக வட்டாரக் கல்வி அதிகாரிகளின் அதிகாரங்கள் அதிகரிக்கப்படும்

இப்பொழுது சேவையில் இருக்கும் ஒரு லட்சத்து 35 ஆயிரம் ஆசிரியரின் கோவைகள் யாவும் அவ் அவ் பிரதேச வட்டாரக்கல்வி அதிகாரிகளின் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இடமாற்றம், பதவி உயர்வு, சம்பள உயர்வு, நேர்முகப்பரீட்சைகள் அனைத்தும் இந்த அலுவலகங்களின் ஊடாகவே பரிசீலனை செய்யப்படும்

இவ்வாறு கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-எ)

## தமிழக....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
எழுந்திருப்பது ஜனநாயக அரசியலுக்குக் கிடைத்திருக்கும் மகத்தான வெற்றியாகும். எமது மக்களுக்கும் இது ஓர் உற்சாகமூட்டும் உதாரணம். — என்றும் அவர் தி.மு.க. வெற்றியைப் பாராட்டி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார். (அ)

## வவுனியா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
அதிகளவு மாணவர்களின் தேவைகளைச் சமாளிக்கவேண்டியிருக்கிறது.

எனவே வவுனியா, திருகோணமலையில் தொழில் நுட்பக் கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

கிழக்கு மாகாணத்தில் சம்மாந்துறையில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரி கூட கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியாகவே இயங்கி வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தொழில் நுட்பக் கல்வியைப் பூர்த்தி செய்வதற்காக அதனையும் முழு அளவு தொழில் நுட்பக் கல்லூரியாகத் தரம் உயர்த்த வேண்டும். -இவ்வாறு அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. (உ-ஒ-ஐ)

## வடக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ரூபாவையும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 7 கோடியே 80 லட்சம் ரூபாவையும், மன்னார் மாவட்டத்திற்கு 4 கோடியே 70 லட்சம் ரூபாவையும் ஒதுக்கியுள்ளது.

உலக வங்கி, யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 6 கோடி ரூபாவையும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஒரு கோடியே 70 லட்சம் ரூபாவையும், வவுனியா மாவட்டத்திற்கு 4 கோடியே 70 லட்சம் ரூபாவையும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 2 கோடியே 40 லட்சம் ரூபாவையும், மன்னார் மாவட்டத்திற்கு 20 லட்சம் ரூபாவையும், ஒதுக்கியுள்ளது.

இந்த வீதி அமைப்பு வேலைகள் யாவும் கருங்

## காலமானர்

கொழும்பு ஜன 25
ஹெட்டன் நஷனல் வங்கி மற்றும் பிரவுன் குரூப் நிறுவனங்களின் தலைவர் திரு. எச் லெஸ்டர் கூரே நேற்றுக் காலமானார்.

## வெற்றியை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தாயமும் ஆதரவும் காட்டியவர். அது ஒரு தமிழ்க் குழுவுக்கு மட்டும் அளித்த ஆதரவல்ல—என்றும் திரு வரதராஜப் பெருமாள் தெரிவித்தார் (அ)

கற்கைகளைக் கொண்டே மேற்கொள்ளப்பட வேண்டும். என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## ஒவ்வொரு ..

[1ம் பக்கத்தொடர்ச்சி]
நிதிகள் இந்தப் பணத்தை அவ்வப்பகுதியில் தேவைப்படும் மக்களுக்கு கடனாக வழங்க முடியும்.

ஒருவருக்கு ஆகக்கூடுதலாக 5 ஆயிரம் ரூபாவே வழங்க முடியும்.

கடன் வழங்கும் பிரதிநிதிகளுக்குவழங்கப்படும் இந்த இரண்டு லட்சம் ரூபாவுக்கு இலங்கை வங்கி வருடாந்தம் 18 சதவீத வட்டியை அறவிடும்.

பிரதிநிதிகள், தாம் வழங்கும் கடனுக்குப் பொதுமக்களிடமிருந்து 30 சத வீத வட்டியை அறவிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

வங்கி சம்பந்தப்பட்ட பிரதிநிதிக்கு வழங்கவிருக்கும் இரண்டுலட்சம் ரூபாவைப் பணமாக அவருக்கு வழங்காது.

அவரது பெயரில் அத்தத் தொகை வாவுவைக்கப்படும்.

பிரதிநிதிகளிடமிருந்து பொது மக்கள் பெற்றுக்கொள்ளும் கடன் தொகைக்கும் பணம் வழங்கப்பட மாட்டாது. காசோலைகளே வழங்கப்படும்.

கடன் பெற்றுக்கொள்பவர் அந்தக் காசோலையை வங்கியில் கொடுத்து மாற்றிக் கொள்ள முடியும். (உ-ஐ)

## தங்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
கள்கொண்டுள்ள ஆழமானபற்றுறுதியை நாம் நன்கறிவோம்.

கடந்த காலங்களில் எதிர்க் கட்சியாக விளங்கிய போதிலும், எமது மக்களின் எண்ண வேட்கைகளைப் புரிந்து கொண்டு குரல் எழுப்பி வந்துள்ளமைக்காக எமது மக்களின் சார்பாக நன்றியையும், கடப்பாட்டையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

எதிர் காலத்தில் எமது மக்களின் நலன்களின் பால் தாங்களும், கழகத்தினரும், தமிழக மக்களும் ஆதரவுக் குரல் தருவீர்கள் என்ற ஆழமான நம்பிக்கை எமக்குண்டு. (அ)
(உ-எ)

## 42 பேர்..,

[1ம் பக்கத்தொடர்ச்சி]
பட்டுள்ளது;

மற்றொரு பெயர்ப் பட்டியல் இவ்வாரம் வெளிவரலாம் என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-10]

## ஈழத்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
எழுப்பியதை நாங்கள் வாஞ்சையுடன் நினைவு கூர விரும்புகிறோம்.

நீங்கள் ஆட்சியில் இல்லாமல் இருந்தும் கூட இலங்கை வாழ் தமிழினத்தின் விடுதலைக்கும், தமிழ்ப் போராளிகளின் போராட்டங்களுக்கும் முழுமையான ஆதரவு கொடுத்ததை எங்களுடைய நெஞ்சங்கள் என்றும் மறவாது.

அதிக பெரும்பான்மைப் பலத்துடன் தமிழ் நாட்டில் ஆட்சிக்கு வந்திருக்கும் நீங்கள் தொடர்ந்தும் இலங்கை வாழ் தமிழினத்துக்காகவும் தமிழ்ப் போராளிகளுக்காகவும் குரல்கொடுப்பதோடு, இந்திய இராணுவத்தைத் தமிழ்மண்ணிலிருந்துவெளியேற்றுவது குறித்தும் இந்திய அரசாங்கத்தை வற்புறுத்தி தமிழினத்தின் சுதந்திரத்தை [illegible] பெற்றுத்தருவீர்கள் என நிச்சயமாக நம்புகிறோம்.

## மக்கள் தொண்டர் படை

ஆட்திரட்டல் - துணைப்பிணைச் சட்டம் - 1985இன் கீழ் வடகிழக்கு மாகாணத்தில் மக்கள் தொண்டர்படை நிறுவ இலங்கை அரசு அங்கீகாரம் அளித்திருக்கிறது. இது சம்பந்தப்பட்ட அரசாங்க அறிக்கை வெளியீடு, இலங்கை ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

பின்வரும் நோக்குகளுக்காகவே இந்த மக்கள் தொண்டர்படை அமைக்கப்பட இருக்கிறது;-

1. ஒழுங்கை நிலைநாட்டுதல், பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல், கலகங்களைத் தடுத்தல், அடக்குதல்.
2. கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுதல் சட்டத்திற்கும் ஒழுங்குக்கும் அச்சுறுத்தலாக உள்ளவர்களைக் கண்டுபிடித்து தடுத்து வைத்தல்.
3. அனுமதியின்றி ஆயுதங்களை வைத்திருப்பவர்களை நிராயுதபாணிகளாக்குதல்.
4. ஆயுதக் கடத்தலைத் தடுத்தல்.
5. சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுதல்.
6. பாதுகாப்புப் படைகளிடையே இணைப்பையும், ஒத்துழைப்பையும் ஏற்படுத்துதல்.
7. இயற்கை அனர்த்தங்களின்போது அவசர நிவாரணப் பணிகளை மேற்கொள்ளல்.

அமைதியை நிலைநாட்டுதல், பொதுமக்களின் பாதுகாப்பு, சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுதல், தனி நபர்களின் சொத்துக்களைப் பாதுகாத்தல் போன்ற முக்கிய நோக்குகள் கொண்ட இந்த மக்கள் தொண்டர்படை, புதியதாக அமைக்கப்பட்டுள்ள வடகிழக்கு அரசாங்கத்தின் ஒரு முக்கியமான அம்சமாகும்

நாட்டு மக்களின் நலனுக்காகவும், பாதுகாப்புக்காகவும் சேவை செய்யவும் உண்மையான எண்ணங்கொண்ட இளைஞர்களை சேர்ப்பதனால் மாத்திரம் இதன் முக்கிய குறிக்கோளை பூர்த்தி செய்யமுடியும். அதேசமயம் இந்த மக்கள் தொண்டர் படையினர் அரசியல் கூட்டோ, எதுவித கட்சிகளின் தொடர்போ இன்றி ஒரு சட்ட ஒழுங்கை நிலை நாட்டுகின்ற ஒரு பொதுப் படையாக இருக்கவேண்டும். இப்படை விரிவாக்கப்பட்டு வருகிறது. புதிய ஆள் திரட்டல் உடனடியாக தொடங்கப்படுகிறது. 18 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்கள் இப்படையில் சேர்க்கப்படுவர். கல்வித் தகுதி குறைந்த பட்சம் 6ஆம் வகுப்பாக இருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் பொன்னான ஆசைகளை நிறைவேற்றவும், வடகிழக்கு மாகாணத்தில் அமைதியை நிலைநாட்டவும், தன்நலமற்ற சேவை புரிய மனம்கொண்ட தக்க இளைஞர்களுக்கு இது ஒரு பொன்னான சந்தர்ப்பம். சாதி மத பேதமின்றி எல்லா இளைஞர்களும் உத்தம சேவை செய்ய வரவேற்கப்படுகின்றனர். (1148)

உ
சிவமயம்
★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விபவ வருடம் தை மாதம் 14 ஆம் திகதி (27 - 01 - 1989) வெள்ளிக்கிழமை காலை 9 30 மணி முதல் 10-58 மணி வரை வரும் சுபமுகூர்த்தத்தில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
இலக்மணேஸ்வரன்
(முருகன் கமக்களஞ்சியம் அம்பனை)
அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
விமலாதேவி
அவர்களுக்கும்

கீரிமலைச் சிவன் கோவிலில் திருமணம் நடாத்த திருவருள் கூடியுள்ளதால் அத்தருணம் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்:
மணமகன் இல்லம் :- 28. 01. 1989 சனிக்கிழமை மாலை
மணமகள் இல்லம் :- 29. 01 1989 ஞாயிற்றுக்கிழமை மாலை
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி வைரமுத்து
பன்னாலை.

திருமதி பேரம்பலம்
வட்டுக்கோட்டை.
(9075)

## மரண அறிவித்தல்கள்

### புண்ணியலிங்கம் சொரூபினி

(தாவடி)
[கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி]

தாவடியைச் சேர்ந்த புண்ணியலிங்கம் சொரூபினி சிவபதமெய்தினார். இவர் சுப்பையா புண்ணியலிங்கத்தினதும் (ஆசிரியர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி). தர்மலட்சுமியினதும் புத்திரியும், சிவதர்சினி (இராமநாதன், நுண்கலை பல்கலைக்கழக மாணவி). ரிசிகேசன், மகிழினி, ரூபினி ஆகியோரின் சகோதரியும், கோண்டாவில் மேற்கு காலம் சென்றவர்களான சுப்பையாவினதும் அன்னம்மாவினதும். (தாவடி) காலம் சென்ற வே. த. பொன்னுத்துரையினதும், தங்கம்மாவினதும் பேத்தியும், பொ. கிருபானந்தன் (ஜனவசம, கற்றன்), புவிமதி, பொ. அருணானந்தம் (சுவிற்சலண்ட்), பொ. நடேசானந்தன் [கனடா], கொக்குவில் கிழக்கு செ. துரைரத்தினம், பராசக்தி, கோண்டாவில் மேற்கு த. சண்முகநாதன், சரோஜினிதேவி (கிளி) ஆகியோரின் மருமகளும், த. தியாகராசா, விஜயலட்சுமி அமெரிக்காவில் வசிக்கும் வசந்தகுமார், கமலாதேவி, பரிமளகாந்தி ஆகியோரின் பெருமகளுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 1989 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் (1.00) ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சு. புண்ணியலிங்கம்.
தாவடி. (9279)

### கனகரெத்தினம் கனகம்மா

நயினாதீவைச் சேர்ந்த கனகரெத்தினம் கனகம்மா 24-01-1989 காலமாகிவிட்டார். இவர் பங்கயாசினி, விமலாதேவி, மணிவாசகர், நாகேஸ்வரன், புவனேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம் சென்ற திரு மாணிக்கம், திரு. மேகநாதன், இந்திராதேவி, தேவராணி, யோகேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ஆவார். இவரது தகனக்கிரியை 25-01-1989 மாலை 4 00 மணியளவில் நயினாதீவு மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் சகலரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
(9086) பிள்ளைகள்.

### ஐயாத்துரை இராஜரட்ணம்

கொழும்பை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய ஐயாத்துரை இராஜரட்ணம் (முன்னாள் றியோ. நவா தியேட்டர் முகாமையாளர்] 23.1 89 அன்று காலமானார். அன்னார் செல்வமணியின் அன்புக்கணவரும், குலேந்திரன் சந்திரலேகா, செல்வராஜா, மகேந்திரராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரராஜசேகரம், சுவர்ணலீலா, தமயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், சதீஸ்கண்ணா, கெமேஸ்கண்ணா, பிறிஜேஷ்கண்ணா, வைஷாலி (கொக்குவில் இந்துககல்லூரி மாணவர்கள்) ஷியாம், ஷஜான், ரதிஷாணி, மலான், கேரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 26 1-89 வியாழன் பிற்பகல் 4-00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பரராஜசேகரம்
நந்தாவில்,
கொக்குவில் (9074)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 25 - 01 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications [pvt] Ltd 292/2 Navalar Road, Jaffna. on Wednesday 25th January 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org